தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர் : ௫௬ மலர் : ௰

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

செ[illegible]ங்கு தமிழ் முன்னேற்றம்

கரந்தை[illegible] தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யா[illegible] : உ௲கச, – துந்துபி தை
(1983 [illegible]வரி - பிப்ரவரி)

பொழிற்றொண்டர்:
வே. சுப்பிரமணியன்

தமிழ்ப் பொழில்

துணர்: ௫௬] [மலர்: ௰

உள்ளுறை:

1 தொல்காப்பியத்தில்—கலைகள் .. 433
கு. சிவஞானம் எம். ஏ;
உதவி இயக்குநர்
தமிழ் வளர்ச்சித்துறை, தஞ்சை.

2 புலங்காணாப் புதுக் கல்வெட்டுக்கள் .. 441
பேரா. சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ; எம். ஃபில்;
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

3 கலை கலைக்காகவா? வாழ்க்கைக்காகவா? .. 445
மோ. அந்தோனிராசு, பி. லிட்;
நான்காமாண்டு மாணவர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

4 மரந்தை மகளிர் .. 454
க. சுப்பிரமணியன், எம். ஏ;
உதவித் தலைமையாசிரியர்,
சமாலியா உயர்பள்ளி, சென்னை—6000.2.

5 பாஞ்சாலி சபதம் .. 460
கே. சோமசுந்தரம், பி. ஏ; பி எல்;
தஞ்சை.

6 ஆயிரத்தில் ஒருவருக்காய் அமைந்த
அழகிய தான்தோன்றி மாடம் .. 469
இரா. கலைக்கோவன், எம். பி. பி. எஃசு; டி. ஓ;
C–87, பத்தாவது குறுக்குச் சாலை,
தில்லை நகர் (மேற்கு விரிவு) திருச்சி—620 018.

7 வினா விடை .. 475
பேரா. ச. பாலசுந்தரம்,
367, மேல அரசவீதி, தஞ்சை,

—— × ——

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருசு	திருவள்ளுவர் யாண்டு உ௲கச துந்துபி—தை 1983 சனவரி—பிப்ரவரி	மலர் ௰

தமிழ் வாழ்க

தொல்காப்பியத்தில்—கலைகள்

கு. சிவஞானம், எம். ஏ.,

1. முன்னுரை:

தொல்காப்பியத்தில் காணப்படும் சில குறிப்புகளைக் கொண்டு அக்காலத்து இசை, கூத்து முதலிய கலைகளின் நிலை யாது என்பதை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

2. இசை:

அ) இசை என்ற சொல்லின் பல வடிவங்கள்:-

நூலின் பல இடங்களில் பயன்படுத்தப்பட்ட சொற்களில் இசை என்பது ஒன்று. இசை, இசைகள், இசையொடு, இசையான், இசையில், இசையினும், இசையிடன், இசைமை, இசைத்தல், இசைக்கும், இசைப்ப, இசைப்பினும், இசைச்குமன், இசையா, இசைய என்று இச்சொல்லின் பல வடிவங்கள் காணப்படுகின்றன. இவையன்றியும், ஒழியிசை, இசைநிறை, தாழிசை, பேரிசை, குன்றிசை, நல்லிசை, இசைநிலை, ஒல்லிசை, மெல்லிசை, ஒற்றிசை முதலிய பல தொடர்களும் தொல்காப்பியரால் பயன்படுத்தப் பட்டுள்ளன.

ஆ) இசை என்ற சொல்லின் பொருள்கள்:-

மேற்குறிப்பிடப்பட்ட சொற்கள் ஒலி, இசை (சங்கீதம்) புகழ் என்ற மூன்று பொருள்களையும் இடத்திற்கு ஏற்றவாறு உணர்த்து கின்றன. மேலும்,

''... ... பொருள் வரைந்து இசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப'' —(157)

என்பதில் உணர்த்தும் என்ற பொருளில் இசைக்கும் என்பது பயன் படுத்தப்பட்டுள்ளது. ஒலிக்கும் என இவ்விடத்தில் பொருள் கூறுவது பொருத்தமாக இல்லை.

பல இடங்களில் ஒலி என்ற நேர்ப் பொருளிலிருந்து சிறு வேறுபாடு கொண்ட பொருள்களில் இசை என்ற சொல் மிகமிகச் சுவைபட ஆசிரியரால் கையாளப் பட்டுள்ளது தொல்காப்பியர் காலத்தில் எத்துணைப் பெருவழக்குப் பெற்றிருந்த சொல்லாக இருந்தது இது (இசை) என்பதை இவை உணர்த்துகின்றன.

இ) இசைப் பொருட் சொற்கள்:

இசைப்பு என்ற சொல் இசை என்ற பொருளை உடையது என உரியியலில் தொல்காப்பியர் கூறுகின்றார்.

''இசைப்பு இசையாகும்'' —(773)

துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல் என்ற நான்கும் இசை என்ற பொருளை உடையவை என்றும் தொல்காப்பியர் கூறுகின்றார்.

''துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்
இசைப்பொருள் கிளவி என்மனார் புலவர்'' —(841)

ஈ) இசை ஒலிகளின் பிரிவுகள்:-

பொதுவாக ஒலி என்ற பொருளை உடையவை இச்சொற்கள் என்றாலும், இசையில் ஒலிகள் பெற்றிருந்த நான்கு வேறுபட்ட நிலைகளை இவை பிரித்துக் காட்டுகின்றன

'தூங்க' என்ற ஒரு சொல்லும் இசைப் பொருளை உடையதாகத் தொல்காப்பியரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

''வான்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடுஅவற்கு அருளிய பிள்ளை யாட்டும்'' —(1006)

மேற்கூறியவற்றால், அக்காலத்தில் இசை ஒலி பெற்றிருந்த பல பிரிவு நிலைகளில், துவைத்தல், சிலைத்தல், இயம்பல், இரங்கல், தூங்கல் ஆகியவை சில எனக் கொள்ளலாம்.

உ) இசை என்ற சொல்லின் பொருள் வளர்ச்சி:-

இசை என்ற சொல் முதலில் ஒலி என்ற பொருள் கொண்டதாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். பின்னர் அது பண்படுத்தப்பட்ட இனிமை தரும் ஒலிகளின் தொடர்ச்சியாகிய இசையை (சங்கீதம்) உணர்த்தும் சொல்லாகி இருத்தல் வேண்டும்.

ஊ) இசையின் தொல்பெயர்:-

தொல்காப்பியர் காலத்திற்கும் மிக முற்காலத்தில் இசையைக் குறிக்க 'இசைப்பு' என்ற சொல் பயன்படுத்தப்பட்டது, என்று கூறலாம். அதாவது, இசை என்பது ஒலியையும் இசைப்பு என்பது பண்படுத்தப்பட்ட ஒலியாகிய இசையையும் (சங்கீதத்தையும்) உணர்த்தும் சொற்களாக மிக முற்காலத்தில் பயன்பட்டிருத்தல் வேண்டும். காலப்போக்கில், இந்நிலை மாறி இசை என்பதே ஆகுபெயராகச் சங்கீதத்தையும் குறிக்கும் சொல்லாகப் பெருவழக்குப் பெற்றுவிட்டது. அதனால், இசைப்பு என்பது பயன்படுத்தப் படுதல் அருகிவிட்டது. எனவே, தொல்காப்பியர் தம் காலத்தில் அதற்குப் பொருள் கூறவேண்டிய நிலை ஏற்பட்டது.

எ) இசை நூல்கள்:-

இசை நூல்கள் பல அக்காலத்தில் இருந்தன. அவற்றை 'இசையொடு சிவணிய நரம்பின் மறை' (33) என்று தொல்காப்பியர் கூறுகின்றார்.

நரம்பு என்பது ஆகுபெயராக யாழைக் குறிக்கும் என்று கூறப்படுகின்றது. எனவே, இசை இலக்கணம் யாழை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

தலைச் சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் இருந்தனவாகக் கூறப்படுகின்ற இசை நுணுக்கம் முதலிய நூல்கள் இங்கு நினைவு கூரத் தக்கவை. ஆனால் அவற்றைப் பற்றிய குறிப்புகள் ஏதும் தொல்காப்பியத்தில் இல்லை.

ஏ) இசைப்பாட்டு வகைகள்:

வெறியாட்டு:

தாம் கருதும் தெய்வத்தை (முருகனை) வரவழைத்தற்குப் பாடப்படுவது, வெறியாட்டு எனப்படும். தெய்வமேறிப் பாடும் நிலையில் ஆட்டமும் நிகழுமாதலின் இது ''ஆட்டு'' எனப்பட்டது. எனினும் தெய்வத்தின் புகழைப் பாடும் இசையே இதில் இன்றியமையாதது. இதனை இசை வகைகளில் ஒன்றாகக் கருதலாம்.

பெரும்பான்மையும் காதல் நோயால் நலிவுறும் பெண்ணின் நோய்க்குரிய காரணத்தை அறியாத தாயர் அதை அறிந்து கொள்ள வெறியாட்டு நிகழ்த்தல் வழக்கம் ஆகும். துடி என்ற இசைக்கருவி இவ்வெறியாட்டின் பொழுது காட்டப்பட்டுள்ளது.

கொற்றவள்ளை:

இது தோற்ற அரசனை விளங்கப் பாடும் பாட்டு. அரசர்களில்

தோற்றவர்களைப் பற்றி மட்டுமே பாடப்படுவது தேவர்களில் தோற்றவர்களைப் பற்றிப் பாடப்படுவது இல்லை.

ஐ) இசைக் கருவிகள்.-

யாழ், துடி, பறை என்ற இசைக் கருவிகள் தொல்காப்பியத்தில் சொல்லப்படுகின்றன. இவற்றில் யாழ், நரம்புக் கருவி, பறை, துடி என்ற இரண்டும் தோற் கருவிகள்.

கருப் பொருள்களைப் பற்றிக் கூறுமிடத்தில் யாழ், பறை என்ற இரண்டையும் தொல்காப்பியர் கூறுகின்றார். (964).

குறிஞ்சி முல்லை முதலிய ஐந்து வகை நிலங்களிலும் தனித் தனியே காணப்படும் பொருள்கள் கருப்பொருள்கள் ஆகும். இப் பொருள்களில் யாழையும் பறையையும் சேர்த்தமையால் ஒவ்வொரு நிலத்திற்கும் தனிவகை யாழும், தனிவகைப் பறையும் இருந்தன என்று கருதலாம். எனவே, ஐந்து வகைப் பறையும் இருந்தன என்பது தொல்காப்பியத்தால் அறிய வரும் செய்தியாகும்.

துடியும் பறையும் போர்க்காலத்தில் கொட்டப்படும் கருவிகளாகவும் பயன்படுத்தப்பட்டன (1005, 10006).

3, கூத்து:

கூத்து என்ற கலை பற்றிய செய்திகள் சில தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

கொற்றவை நிலை, காந்தள், பூ, வள்ளி, கழல் நிலை, பிள்ளை யாட்டு, அமலை, முன்தேர்க் குரவை ஆகிய கூத்து வகைகள் கூறப்பட்டுள்ளன. இவை, பெரும்பான்மையும் போருடன் தொடர்புடையவை.

காந்தள்:-

பகைவர் நாட்டில் உள்ள ஆநிரைகளைக் கவர்ந்து வரும் செயலில் ஈடுபட்ட வீரர்கள் காந்தள் பூவைச் சூடி ஆடும் ஆட்டம்.

பூ:-

மூவேந்தர்க்கும் உரிய போந்தை, வேம்பு ஆகிய பூக்களில் அவரவர்க்கு உரிய பூவை ஆநிரை கவர்தலில் ஈடுபட்ட வீரர்கள் சூடி ஆடும் ஆட்டம்.

வள்ளி:-

இது வாடா வள்ளி என்று தொல்காப்பியரால் கூறப்படுகின்றது. வள்ளிக் கொடி வாடுவது ஆகலின், அதிலிருந்து இக்

கூத்தினை வேறுபடுத்திக் காட்டுதற்கு இதனை வாடா வள்ளி என்று தொல்காப்பியர் கூறினார். இதுவும் ஆநிரை கவர்தலில் ஈடுபட்ட வீரர்கள் ஆடும் கூத்து ஆகும்.

கழல் நிலை:-

இது காலில் கழல் கட்டி ஆடும் கூத்து. இதுவும் ஆநிரை கவர்தலில் ஈடுபட்ட வீரர்களால் ஆடப்படுவது ஆகும்.

இது, ''ஏத்திய ஓடாக் கழல் நிலை'', என்று அடைமொழி யுடன் சொல்லப்பட்டுள்ளது. அதனால், வீரர்கள் தெய்வத்தை அல்லது தம் வேந்தரை ஏத்திப் பாடிக் கழல் கட்டி ஆடுவது என்று கூறலாம்.

பிள்ளையாட்டு:-

இது வாள்கொண்டு வீரப்போர் செய்த வீரனைக் கொண் டாடிய கூத்து.

அமலை:-

இது, வென்ற வேந்தனின் வாள் வீரர்கள் இறந்து வீழ்ந்த வேந்தனின் உடலைச் சூழ்ந்து நின்று ஆடும் கூத்து ஆகும்.

முன்தேர்க் குரவை:-

இது, வென்ற அரசனின் தேர்முன் நின்று வீரர்கள் ஆடும் கூத்து.

4. சித்திரம்:

சித்திரம் என்ற சொல் செய்யுளியலில் காணப்படுகின்றது. பாவின் இருபது வண்ணங்களில் 'சித்திர வண்ணம்' என்பதும் ஒன்று என உணர்த்தும் இடத்தில் இச்சொல் காணப்படுகின்றது. பாவில் நெட்டெழுத்துக்களும் குற்றெழுத்துக்களும் நேர்ந்து உடன் வரும் வண்ணம் சித்திர வண்ணம் ஆகும்.

இதைத் தவிரச் சித்திரத்தைப் பற்றிய செய்தி தொல்காப்பி யத்தில் இல்லை.

5. சிற்பம்:

சிற்பக் கலைகளைப்பற்றிய செய்திகளும் தொல்காப்பியத்தில் இல்லை என்றே கூறலாம்.

இறந்த வீரர்களுக்கு நடுகல் நடும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது. இக்கல்லைத் தேர்ந்து எடுப்பதில் ஈடுபட்டோர்

மேற்கொள்ளும் சடங்கு முறைகள் மிக விளக்கமாகக் கூறப்படுகின்றன.

''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்று
இருமூன்று வகையிற் கல்லொடு புணர''—(1006)

இந் நடுகல்லின் அமைப்பு பற்றிய சிற்ப நுணுக்கச்செய்திகள் இந்நூலில் கூறப்படவில்லை.

6. **கலைஞர்கள்:**

அ) **இசைக் கலைஞர்கள்:-**

பாணன், பாடினி, சூதர் ஆகிய இசைக் கலைஞர்கள் குறிக்கப்படுகின்றனர்.

பாணன், பாடினி:-

பாணன் என்பது ஆண்பாற் பெயராகவும் பாடினி என்பது அதற்குரிய பெண்பாற் பெயராகவும் காணப்படுகின்றன. தொல்காப்பியர் காலத்து இலக்கியத்தில் தலைவன் தலைவியரின் இல்லற வாழ்க்கையொடு தொடர்புடைய உறுப்பினர்களாக இவர்கள் கூறப்படுகின்றனர்.

ஊடற் காலங்களில் ஊடலைத் தணிப்பதற்குத் தலைவன் சார்பில் தலைவி, தோழி ஆகியோரிடம் சென்று பாணர்கள் நயந்து வேண்டுவர்.

''பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை''—(1906)

இவ்வாறு சமாதானம் செய்வோரைத் தொல்காப்பியர் வாயில்கள் எனக் கூறுவர்.

''தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்
பாணன், பாடினி, இளையர், விருந்தினர்
கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப'' —(1139)

தலைவன் பிரிந்து வேற்று நாட்டில் இருக்கும் பொழுது அங்குச் சென்று தலைவியின் நிலையை எடுத்து உரைப்பதும், தலைவன் மீண்டும் வரும் காலத்தை அறிந்து வந்து தலைவியிடம் உரைப்பதும் இவர்கள் மேற்கொண்ட கடமைகள்.

''நிலம் பெயர்ந்து உரைத்தல் வரைநிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய'' —(1115)

யாத்தவை என்ற சொல் சிறிது சிந்திக்கத் தக்கது. அவர்களுக்கு என்று இவை வரையறுக்கப்பட்ட கடமைகள் என்று இச்சொல் உணர்த்துகின்றது. சமுதாய வாழ்வில் இவ்விசைக் கலைஞர்கள் பெற்று இருந்த இவ்வரையறை, இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது எனக் கொள்ளலாம்.

'நல்லிசை நயந்தோர்'—(1093)

என இவர்களைத் தொல்காப்பியர் குறிக்கின்றார். இசை நன்மை பயக்கக் கூடியது. அதனால் அது நல்லிசை. அந்நல்லிசையை நயந்தோர் கலைஞர்கள் எனக் கூறுகின்றமையால் தொல்காப்பியர் அவர்கள்பால்கொண்ட மதிப்புப் புலப்படும்.

சூதர்:-

இசைக் கலைஞர்களில் 'சூதர்' ஒரு வகையினர், வைகறைப் பொழுதில் மன்னர்களைத் துயில் எழுப்புதற்குப் பண் இசைப்போர் சூதர் எனத் தொல்காப்பியர் கூறுகின்றார். தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய துயில்எடை நிலையும்.

—(1037)

நல்ல இசையைக் (புகழை) கருதி வேந்தர்கள் உறங்குவர். அவர்களை இசைபாடிச் சூதர் துயில் எழுப்புவர் என்ற இந்நூற்பாவின் நயம் சிந்தித்து மகிழத்தக்கது. சூதர் வந்து பாடும் நல்லிசையைக் கேட்கவேண்டும் என்ற ஆவலுடன் வேந்தர்கள் துயிலுணர்ந்த பின்னரும் கட்டிலில் கிடக்க, அவ்வேளையில் சென்று இசைபாடுவர் சூதர் என்னும் பொருள் கொள்ள இந்நூற்பா இடம் தருகிறது.

ஆ) கூத்துக் கலைஞர்கள்:-

பாணர்களைப் போலவே இவர்களும் தலைவன் தலைவியரின் இல்லற வாழ்வில் ஊடலைப் போக்குதற்கும், அவர்களின் இல்லற இன்பம் தடைப்படாமல் பெருகுதற்கும் பெரும்பங்கு பற்றியதாகத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

7. கலைஞர்களின் வாழ்க்கை முறை:

ஆற்றுப்படை என்ற இலக்கியத்தின் இலக்கணம் பற்றித் தொல்காப்பியர் கூறுகின்றார். அதில், பாணர், கூத்தர் முதலிய கலைஞர்கள் பெருவள்ளல்களை நாடிச்சென்று தம் கலைத்திறனை வெளிப்படுத்திப் பொருள் பெற்று வாழ்வர் என்று கூறுகின்றார் (1037). இவ்வாற்றுப்படை அக்காலத்தில் கலைஞர்களின் வாழ்க்கைமுறை அமைந்த தன்மையைக் காட்டுவதாகக் கொள்ளலாம். மேலும், ஊடல் தவிர்த்தல் முதலியவற்றிற்கு இக்கலைஞர்களை வாயில்களாகப் பயன்படுத்தியோர் அவ்வப்போது தந்த

பொருள்களைக் கொண்டும் இவர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொண்டிருக்கலாம்.

கலைஞர்களின் பெருமை:-

இசை, கூத்து, முதலிய கலைகளில் ஈடுபட்டதோடு அமையாது, கற்பு நெறி கடைப்பிடித்து வாழும் இல்லறத்தாரின் வாழ்க்கையிலும் தொடர்புகொண்டு, இல்லற இன்பம் தடைப்படாது நிகழ்தற்குரிய கடமைகளை இவர்கள் செய்தமையால் கலைஞர்கள் சமுதாயத்துடன் கொண்டிருந்த தொடர்பு புலப்படும்.

நல்லிசை நயந்தோர் என்று தொல்காப்பியர் இவர்களைக் குறித்தல், கலைஞர்கள்பால் சமுதாயம் கொண்டிருந்த பரிவைப் புலப்படுத்தும்.

தோழி, தாய், அறிவர் முதலியோருடன் பாணன், பாடினி, கூத்தர், விறலியர் ஆகியோரும் ஒத்த நிலையில் வாயில்களாகக் கூறப்படுகின்றனர். சமுதாயத்தில் கலைஞர்களும் மற்றவர்களுக்குச் சமமான பெருமையைப் பெற்று இருந்தமையை இது உணர்த்துகின்றது.

(முற்றும்)

திருக்குறள்

—: பொருள் விளக்கம் :—

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

வேண்டும் நற்குணங்களை விழைந்து, வேண்டா இழிகுணங்களை விழைதல் இல்லாத இறைவனின் நன்னெறியினை விழைந்து பொருந்தியவர்க்கு எக்காலக் கட்டத்திலும் எத்துன்பங்களுந் தோன்றி உளத்தை வருத்தும் எவ்விதத் துயரத்தையும் அளிப்பது இலவாம்.

—கா. அ.

புலங் காணாப்

புதுக் கல்வெட்டுக்கள்

சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ., எம். ஃபில்.,

(3) தஞ்சைப் பெரிய கோயிற் கல்வெட்டுக்கள்:

முனைவர் ஹுல்ட்சு, முனைவர் இரா. நாகசாமி இவர்களது தென்னிந்தியக் கல்வெட்டு இரண்டாம் தொகுதியும், தஞ்சைப் பெருவுடையார் கோவில் கல்வெட்டுக்கள் தொகுதியிலும் இடம் பெறாத, கல்வெட்டுத் துறையினரால் காணப்படாத இரு கல் வெட்டுக்கள் தஞ்சை பெரியகோயிலிலே உள்ளன. அக்கல்வெட்டுக் களை இவண் காணலாகும்.

கிழக்கு முகப்புப் பட்டைக் கல்வெட்டு:

பெரிய கோயிலின் அம்மன் சன்னதி பின்புறம் திருச்சுற் றாலைக் கோயிலின் கிழக்கு முகப்புப் பட்டையில் இக்கல்வெட்டு காணப்படுகின்றது.

இக்கல்வெட்டு இராசேந்திர சோழனின் மூன்றாவது ஆட்சி யாண்டில் வெட்டுவிக்கப்பட்டுள்ளது.

இராசராசனுடைய 29-ஆவது ஆட்சியாண்டும், இராசேந்திர னுடைய ஆட்சியாண்டு 3-ஆவதும் ஆகிய கி. பி. 1014—1015 வரை இவர்கள் இருவரது சேவகர் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்து திருச்சுற்றுமாளிகையில் உள்ள 'ஆலயத்து உமாபரமேசு வரி'யார்க்குக் கொடுத்த ஆபரணங்களுள் இராசராசனது ஸ்ரீகார்யம் கொடுத்த பொன்தாலி ஒன்றும் இராசேந்திரனது துரைச்சேவகன் கொடுத்த பட்டைக்காறை ஒன்றும் குறித்த விளக்கத்தினை இக் கல்வெட்டு உணர்த்துகின்றது.

பதினாறு வரிகளில் உள்ள இக்கல்வெட்டு பெரிகோயிலின் அமைப்பு நிலையில் பெரும்மாறுதலையும், விளக்கத்தினையும் தரக் கூடிய கல்வெட்டாகும். அத்தோடு இராசராசனின் ஆட்சிக்காலத்தில் விளங்கிய சில பொருள்களின் சிறப்புப் பெயரினையும், சில வழக்குப் பெயரினையும் இக்கல்வெட்டு அறிமுகப்படுத்துகிறது. மேலும் தஞ்சைப் பெரியகோவிலில் உள்ள கல்வெட்டுக்களைப் பொறித்த கல்லெழுத்தாளன் பெயரையும் தருகின்றது.

கல்வெட்டு : 1

1 ஸ்வஸ்திஸ்ரீ : உடையார் ஸ்ரீராஜராஜ...
2 ர் உடையார்க்கு ஸ்ரீ கார்யஞ் செய்கின்
3 ற ஆற்றூருடையான் நக்கன் தோன்றி
4 உடையார் கோயிலில் திருச்சுற்று மாளி
5 கையில் ஆலையத்து உமாபரமேஸ்வரியார்க்கு
6 உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தெ
7 தான்பதாவது வரை குடுத்தன கல்லில் வெட்டியது. ஆலை
8 யத்து உமாபரமேஸ்வரியார்க்கு சாத்தி அருள குடுத்த தா
9 லி ஒன்று பொன் ஆடவல்லானால் இருகழஞ்சரை
இவர்க்கே ஸ்ரீ ராஜேந்ர
10 சோழதேவர் சிறுதனத்து இரட்டகுலகாலத்தெரிந்த உடநி
11 லைக்கு துரைச்சேவகரில் உடையார் கோயிலில் கல்
12 லில் எழுத்து வெட்டுவிக்கின்ற அருமொழிதேவ
வளநா
13 ட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்து சாத்தன்குடி வெ
14 ள்ளாளன் இரவி பாளூர் உடையார் ஸ்ரீ
ராஜேந்ர சோழ தே
15 வர்க்கு யாண்டு மூன்றாவதுவரை குடுத்த பட்டைக் கா
றை ஒன்று பொன் ஆடவல்லான் என்னுங் கல்லா
16 ல் நிறை முக்காலே மூன்று மஞ்சாடி.

இராசராசன் காலத்தில் தஞ்சைப் பெரிய கோயிலில் அம்மனுக்கு என தனித்த கோயில் இல்லை. திருச்சுற்று ஆலையின் வடபுறம் இன்றைய அம்மன் கோயிலுக்கு நேர் பின்னேதான் அம்மன் கோயில் இராசராசன் காலத்தில் அமைந்திருந்தது. கோயிலின் இடப்பக்கம் முழுதுமே உமை, மகிடாசுரமர்த்தினி, கலைமகள், உமையொருபாகன் முதலிய பெண்மைத் தெய்வங்கள் வெளியேயும், சக்தி உருவம் கருவறையைச் சுற்றியுள்ள ஓவியச் சுற்றிலுமாக அமைந்துள்ளன. இவ்வமைப்பு பெரிய கோயிலின் விமானத்தையே உமையொரு பாக வடிவாக — கோபுரத்தின் இடப்புறம் சக்தி பாகமாக விளங்கிடும் வண்ணம் அமைத்துள்ள சிறப்பு மிக்கதென்பது இதனாற் புலனாம்.

இராசராசனுக்கு ''ஸ்ரீ கார்யஞ் செய்கின்ற'' ஆற்றூருடையான் நக்கன் தோன்றி என்பான் அம்மனுக்கு இராசராசனது இருபத்தொன்பதாவது ஆட்சியாண்டில் பொன்னாலாய தாலி ஒன்றினை

அளித்துள்ளான். அதே சமயத்தில் கி. பி. 1014-இல் இராசேந்திர சோழனின் மூன்றாவது ஆட்சியாண்டில் இராசேந்திரனின் சிறுதனத்து இரட்டகுலகாலத் தெரிந்த உடநிலைக்கு துரைச்சேவகரில் உடையார் கோயிலில் கல்வெட்டிய இரவி பாளூர் என்பான் அம்மனுக்கு பட்டைக் காறை ஒன்றினை அளித்துள்ளான். இச்செய்திகளால் கி. பி. 1012 முதல் 1014 வரை மூன்றாண்டுகள் இராசராசனும் இராசேந்திரனும் இணைந்து நடத்திய ஆட்சியுண்மை புலனாகின்றது. தத்தமக்கெனத் தனித்தனிச் சேவகர் குழாங்களைக் கொண்டு செயற்பட்ட திறமும் வெளிப்படுகிறது.

இக்கல்வெட்டுள் காணப்படுகின்ற 'இரவி பாளூர்' என்பான் தஞ்சைப் பெரிய கோயிற் கல்வெட்டுக்களை வெட்டியவன் ஆவன். இவன் அருமொழிதேவ வளநாட்டு வண்டாழை வேளூர்க் கூற்றத்து சாத்தன் குடியினைச் சார்ந்தவன். சாதியில் வெள்ளாளன் ஆவன், இவனே இராசேந்திர சோழனுக்குரிய சிறுதனம் என்ற அதிகாரிப் பிரிவில் பணியாற்றியுள்ளான். அப்பணிக் குழுவினர் இராசேந்திரனது இரட்ட நாட்டுப் போர் நிகழ்ச்சியில் பங்காற்றி வெற்றி பெற்றோராவர். அவருள்ளும் சிலரே இராசேந்திரனுக்கு மிக அணுக்கமாகச் செயலாற்றியுள்ளனர். அவர்களை 'இரட்ட குலகாலத் தெரிந்த உடனிலையினர்' என வழங்கியுள்ளனர். இராசேந்திரனுக்குரிய தனிப்பணிகளைச் செயற்படுத்திய இவர்களைத் 'துரைச் சேவகம்' செய்வார் என இக்கல்வெட்டு புகல்கிறது. இராசராசனின் இருபத்தொன்பதாவது ஆட்சியாண்டும் இராசேந்திரனின் மூன்றாவது ஆட்சியாண்டுமாகிய கி. பி. 1014-இல் 'துரைச் சேவகர்' என்ற சொல் வழக்கிலிருந்தமையினை இதனால் அறிய முடிகிறது. புதிய செய்தியாகக் கண்டு மகிழ முடிகிறது.

மேற்கு முகப்புப்
பட்டைக் கல்வெட்டு:

மேலன...... மேற்கு முகப்புப் பட்டையில் இக் கல்வெட்டு காணப்படுகிறது.

மேற்குறித்த கல்வெட்டிற்கு இணையாக உள்ள இக்கல்வெட்டில் இராசராசனின் ஸ்ரீ கார்யம் ஆற்றூருடையான் நக்கன் தோன்றி இவ்வாலயத்து உமாபரமேசுவரியார்க்கு வெண்கலத்தாலாய மண்டை ஒன்றும், தராவினால் ஆன கலசப்பானை ஒன்றும் கொடுத்துள்ள செய்தி கூறப்படுகிறது.

இக்கல்வெட்டின் காலமும் கி. பி. 1014 ஆகும். இக்கல்வெட்டின் முதல் மூன்று வரிகளும் நடுவே சிதைந்துள்ளன. கூடுதல்

வரிகள் பதினொன்று ஆகும். வியக்கத்தக்க புதிய செய்தியாக 'ஆடவல்லான் என்னுந் திலாக்கோல்' என்ற தொடர் காணப்படுகிறது. ஆடவல்லான் என்ற பெயரால் அமைந்த எடைக்கற்களையும், அளவுகோல்களையும், மரக்கால்களையுமே கண்டு வந்த நமக்கு ஆடவல்லான் என்ற பெயரால் 'துலாக்கோல்'களும் இராசராசன் காலத்தில் வழங்கிய செய்தியளிக்கும் புதிய கல்வெட்டாக இக்கல்வெட்டு அமைகிறது.

கல்வெட்டு: 2.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ......................டயார் ரா
2. ஜ ரா.........................டையார்க்கு
3. ஸ்ரீ கார்ய ....கின்ற ஆற்
4. றூருடையான் நக்கன் தோன்றி ஆலய
5. த்து உமாபரமேஸ்வரியார்க்கு உடையா
6. ர் ஸ்ரீ ராஜேந்ர சோழ தேவர்க்கு யாண்டு மூ
7. ன்றுவது வரை குடுத்த வெண்கல முத்தரா
8. வும் ஆடவல்லான் என்னுந் திலாக்கோலால்
9. நிறை எடுத்து கல்லில் வெட்டின படி வெண்கலமண்
10. டை ஒன்று நாற்பத்து முப்பலம் தராக்க
11. லசப்பானை ஒன்று நிறை ஐம்பத்தெண்பலம்.

———(o)———

திருமூலர் திருமந்திரம்

திருமூலர் மூவாயிரம் பாடல்கள் பாடியுள்ளார். திருமந்திரம் என்பது அவருடைய நூல். பெயருக்கு ஏற்றபடி மந்திரம்போல் சுருங்கிய சொற்களில் ஆழ்ந்த பொருள் திட்பமாக அமைந்த பாடல்களும், மறைந்த நுட்பமான பொருள் உடைய பாடல்களும் திருமந்திரத்தில் உள்ளன. தத்துவக் கருத்துகள் முதல், யோகநெறி சித்த வைத்தியக் கருத்துகள் வரையில் பலவும் செறிந்த நூல் அது. பக்தியின் சிறப்பை அறிவுறுத்துமிடத்தில், அவர், ''அன்பு சிவம் என்பவை இரண்டு பொருள் அல்ல, அன்பே சிவம் உணர்ந்தவர் சிலரே. அவர்களே ஞானிகள்; அவர்களே கடவுள் தன்மை பெற்றவர்கள்'' என்கிறார்.

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே

—மு. வ., தமிழ் இலக்கிய வரலாறு.

கலை கலைக்காகவா? வாழ்க்கைக்காகவா?†

மோ. அந்தோனிராசு,

பி. லிட்., நான்காம் ஆண்டு மாணவர்.

கலை கலைக்காகவா? அல்லது கலை வாழ்க்கைக்காகவா என்னும் சிக்கலான வினாவிற்கு விடைதேடவேண்டும் என்றால் முதலில் கலை என்றால் என்ன என்று தெரிந்து கொள்வது நல்லது. ''கலை என்பது ஒருவகை ஆற்றல்; குறிப்பிட்ட ஒரு வழியை மேற்கொண்டு, முன்னரே கலைஞன் மனத்தில் தோன்றிய ஒரு பயனைப் பிறர் அறியச்செய்யும் ஆற்றலே ஆகும் அது''[1] என்று ஆபர்கிராம்பி என்னும் திறனாய்வாளர் அவரது **PR NCIPLES OF LITERARY CRITICISM** என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். ''கலை அதனிடத்துப் பழகுகிறவர்களை உணர்வு வலையில் சிக்கச் செய்யவேண்டும்'' என்று டால்ஸ்டாய் என்பார் கூறுகின்றார். ''கலையானது வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது மட்டுமல்ல, வாழ்க்கைக்கு விளக்கம் தருவதும் ஆகும்''[2] என்பதாக சோவியத் நாட்டு எழுத்தாளர் பிளெஹானவ் என்பவர் குறிப்பிடுகின்றார். அத்தகைய கலைகளுள் ஓவியம், சிற்பம், இசை, இலக்கியம், நடனம், நாடகம், கட்டடம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. எனினும், கலை கலைக்காகவா? வாழ்க்கைக்காகவா? என்பதில், கலை வாழ்க்கைக்காகவே – கலை சமுதாயத்திற்காகவே (ART FOR THE SAKE OF SOCIETY) என்னும் எனது கருத்திற்குச் சான்றாக, இவண் இலக்கியக் கலையை மட்டுமே எடுத்துக்கொள்கின்றேன்.

இலக்கியமானது மகிழ்வூட்டல், அறிவுறுத்தல் என்னும் இரு பணிகளைச் செவ்வனே செய்யவேண்டும் என்பது அறிஞர் கருத்து. ''இலக்கியம் என்பது ஓய்வும் சிறப்பும் வாய்ந்த ஒரு சிறு கூட்டத்தாரின் தனியுரிமை அன்று, அது கல்வியறிவும் கலை வேட்கையும்

---

†15-12-1982இல் நடைபெற்ற கல்லூரிக் கருத்தரங்கில் படிக்கப் பெற்ற ஆய்வுக் கட்டுரை.

1 L. Abercrombie-Principles of Literary Criticism-P.21. But the word 'art' has the same core of meaning in all its contexts; it is always skill definitely and deliberately designed to produce an intended result.

2 பிளெஹானவ். 'கலையும் சமுதாய வாழ்க்கையும்' (தமிழில் ரா. கிருஷ்ணையா), முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ, 1979, பக். 7.

உடைய அனைவருக்கும் உரிய பொதுச் செல்வம்''[3] என்று டாக்டர் மு. வ, அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். மனிதனை-மனித சமுதாயத்தினை மகிழ்ச்சியுடன் வாழச் செய்வதற்குப் பயன்படுவதோடு, அறிவுரைகளையும், அறவுரைகளையும் கலை தருகின்றது என்றால் கலை வாழ்க்கைக்காகவே என்பதும் உண்மைதானே!

இலக்கியக்கலை சங்க காலந்தொட்டுப் பதினெட்டாம் நூற்றாண்டு வரையிலும் செய்யுள் அல்லது கவிதை வடிவில் வெளியாயிற்று. பத்தொன்பது, இருபது ஆகிய இருநூற்றாண்டுகளான தற்காலத்தில் பெரும்பாலும் உரைநடை வடிவில் இலக்கியம் உலா வருகின்றது. இலக்கியத்தை மனித இனத்திற்குப் பயன்படச்செய்ய வேண்டும் (Humanization of Literature) என்றும் ஆய்வுரையை 'மக்கள் நுதலிய அகன் ஐந்தினை' என்று தொல்காப்பியரே தொடங்கி வைத்ததாக டாக்டர் தமிழண்ணல் கூறுகின்றார்கள்.[4]

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் 'கலை கலைக்காகவே' 'கலை வாழ்க்கைக்காகவே' என்னும் கோட்பாடுகள் ஐரோப்பாவில் எழுந்தன. கலை கலைக்ககாகவே என்னும் கொள்கையை எழுப்பியவர்களுள் ஏ. சி. பிராட்லி (A. C. BRADLEY) என்பவரும், கலை வாழ்க்கைக்காகவே என்று குரல் கொடுத்தவர்களுள் பிரௌனிங் (BROWNING) என்பவரும் குறிப்பிடத்தக்கவர்கள். ''கலைஞர்களும், கலைப் படைப்புக்களில் ஆழ்ந்த அக்கறை கொண்டோரும், அவர்களைச் சுற்றிலும் உள்ள சமுதாயச் சூழலிடம் தீரமுடியுமென்ற நம்பிக்கைக்கு இடமின்றி, பிணக்கு கொள்ளும் போது கலை கலைக்காகவே என்கிற போக்குடையோர் ஆகின்றனர்''[5] என்னும் சோவியத் நாட்டு எழுத்தாளரின் கருத்து எமக்கு உடன்பாடே.

உலகின் பல இடங்களிலும் தோன்றிய பலவிதப் புரட்சிகளின் காரணமாகவும், குறிப்பாக அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டதின் விளைவாகவும் இன்று எல்லோரும் கலையை ரசிக்கக்கூடிய அனுபவிக்கக்கூடிய-பயன்படுத்தக்கூடிய ஒரு சூழல் உள்ளது.

---

3 டாக்டர் மு. வரதராசன், இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை, பிப்ரவரி, 1979, பக். 149.

4 ஒப்பிலக்கிய அறிமுகம், டாக்டர் தமிழண்ணல், சோலை நூலகம், மதுரை, நவம்பர், 1979 (நான்காம் பதிப்பு), பக். 13.

5 பிளெஹானவ் '' கலையும் சமுதாய வாழ்க்கையும் '' (தமிழில் ரா. கிருஷ்ணையா), முன்னேற்ற பதிப்பகம். மாஸ்கோ, 1979. பக். 7.

சங்ககாலத்திலும், சங்கத்தைத் தொடர்ந்த காலங்களிலும், பலவகைக் கலைகளும் வளரும் நிலையான இடமாகக் கோயில்கள் திகழ்ந்தன என்பது வரலாறு காட்டுகின்ற செய்தி. இயல், இசை, நாடகம் போன்ற முத்தமிழ்க் கலைகள் கோயில்களில் ஏன் வளர்ந்தன என ஆராய்வோமானால், கலை மக்கள் வாழ்க்கைக்காகவே என்ற கோட்பாட்டின் உண்மை புரிய வரும். கோயில்கள்தான் பெரும் பான்மையான மக்கள் வந்து கூடுகின்ற பொதுவான இடம். அந்தப் பொது இடத்தில் எல்லா வகைக் கலைகளையும் வளரச் செய்தால்தான் எல்லா மக்களாலும் அவைகளை அனுபவிக்க முடியும் என்பதற்காக, நடமாடுங் கோயில்களாம் மக்களுக்காக, படமாடுங் கோயில்களில் கலைகள் வளர்க்கப்பட்டன.

'யாதும் ஊரே, யாவருங் கேளிர்' என்னும் கணியன் பூங் குன்றனாரின் பாடல் வரி, அன்று முதல் இன்று வரை எத்தனையோ இடங்களில், எத்தனையோ மனிதர்களால் மேற்கோளாகப் பயன் படுத்தப்படவில்லையா? தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்னும் சிறந்த வாழ்வியல் தத்துவத்தை உணர்ந்து நடந்தால் வாழ்க் கையைச் செம்மைபடுத்த முடியாதா? அத்துணைச் சிறப்புவாய்ந்த கவிதை வரியைக் 'கலை கலைக்காகவே' என்று சொல்லிப் பயன் படுத்தாமல் இருக்க முடியுமா? உலக மக்கள் அனைவரையும் உறவினராக்கிக் காட்டிய சங்கப் புலவனின் உள்ளத்தினை நினைந்து, நினைந்துபோற்றுகின்ற அளவிற்குச் சமுதாயத்திலே அந்த வரிகள் தனியிடத்தைப் பெறுகின்றனவே. "அழியா உண்மையும், ஆழமும் மிகுதியாகப்பெற்றுத் திகழ்தலே சிறந்த கவிதையின் இலக்கணம்"[6] என்று மாத்யூ ஆர்னல்ட் கூறும் கவிதை இலக்கணத்தை, யாம் மேலே காட்டிய 'யாதும்ஊரே; யாவருங்கேளிர்' என்று தொடங்கும் 192-ஆம் புறப்பாடலில் தெளிவாகக் காணலாம். கலிங்கத்துப் பரணியில்,

> தரைமகள்தன் கொழுநன்தன் உடலந்தன்னைத்
> தாங்காமல் தன்னுடலால் தாங்கி விண்ணாட்டு
> அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
> ஆவியொக்க விடுவாளைக் காண்மின்! காண்மின்!!

என்று செயங்கொண்டார் பாடுகின்றப் பாடல். பொருள் நலம் கொஞ்சுவதாய், கவிதை வளம் விஞ்சுவதாய் அமைந்துள்ளது.

---

6 M. Arnold, Essays in Criticism–P. 21.
'The substance and matter of the best poetry acquire their special character from possessing, in an eminert degree truth seriousness'

சங்க இலக்கியங்கள், இடைக்கால இலக்கியங்கள் மட்டுமன்றித் தற்காலக் கவிதைகளும், மக்கள் வாழ்க்கைக்காக, சமுதாய நலனுக்காக எழுந்தவைகளே. பாரதியாரின் பாடல்களில் பெரும்பாலானவை இந்திய விடுதலை என்னும் மாபெரும் சாதனைக்குக் கருவியாகப் பயன்பட்டதை நாமறிவோம். கூனல் முதுகுடைய கோழையைக்கூடக் குன்றென நிமிர்ந்து நடக்கச் செய்த பாரதியின் கவிதைகளைக் 'கலை கலைக்காகவே' என்று ஒதுக்கிவிட முடியுமா?

''தொண்டு செய்யும் அடிமை—உனக்குச்
சுதந்திர நினைவோடா
பண்டுகண்ட துண்டோ—அதற்குப்
பாத்திர மாவாயோ''

என்று ஆங்கிலேயர் கூறியதாகப் பாமரருக்கும் புரியும் வகையில் பாரதி எழுதிய கவிதைக் கலைதானே,

''சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம் — இனி — அஞ்சிடோம்''

என ஒவ்வொரு இந்தியனையும் வஞ்சினம் உரைக்கச் செய்தது.

இன்றைக்கு வளர்ந்து வருகின்ற புதுக்கவிதைகளும், இளைய சமுதாயத்தினரிடையே ஒரு எழுச்சியுணர்வை ஊட்டியுள்ளதோடு, பலரைக் கவிஞர்களாக, இலக்கியப் படைப்பாளிகளாக மாற்றியும் உள்ளது.

''நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்
ஆடை வாங்குவதற்காக''

என்ற நா. காமராசனின் வரிகளும்,

''பொருட் பாலுக்காகக்
காமத்துப் பாலை
விற்கிறேன் அதற்காக
அறத்துப்பால் ஏன்
அழுது புலம்புகிறது''7

என்ற எஸ். எஸ். சுந்தர் அவர்களின் வரிகளும் நாட்டில் விபச்சாரங்களும், விபச்சாரிகளும் தோன்றுவதற்கான காரணங்களைக் காட்டுவதோடு இவர்களின் வாழ்விற்கு வழிவகை செய்தால், ஒழுக்ககேட்டை அகற்றலாம் என்ற அறிவுரைகளையும் தாங்கி நிற்கின்றன.

''நீ நீயாகத்தான் இருக்கிறாய்
நான்தான் நானாக இல்லை''

---

7 எஸ். எஸ். சுந்தர், கதம்பம், பச்சைப்பன் கல்லூரி, தமிழ் முதுகலை மாணவர் வெளியீடு, சென்னை, 1973, பக். 5.

என்னும் மேத்தாவின் வரிகள், நட்புணர்வோடு பழகுகின்ற பெண்களை அல்லது ஆண்களைத் தவருக புரிந்து கொண்டு பின் வேதனையில் வாடுகின்ற இளைய சமுதாயத்தைக் காட்டுவதோடு, அவர்களைப் பார்த்து " இளைஞர்களே நட்பை, நட்பாகப் புரிந்து கொள்ளுங்கள். தவருகப் புரிந்து கொண்டு, முடிவில் 'உலகே மாயம்' என்ற நிலைக்குச் செல்லாதீர்கள்'' என்று இளைய சமுதாயத்திற்குரிய வாழ்க்கைத் தத்துவமும் உரைக்கப்படுவதால் இக்கவிதையும் வாழ்க்கைக்காகவே என்று வன்மையாகக் கூறலாம்.

''பூக்களிலே நானும் ஒரு பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்
பூவாய் பிறப்பெடுத்தும் என்னைப் பொன்விரல்கள்
தீண்டலையே நான் பூமாலை ஆகலையே''

என்று அரளிப்பூ அழுவதாக, வரதட்சணைக் கொடுமையால் வாடி நிற்கும் வனிதையர்களின் உள்ளக் கொதிப்புக்களைக் குறியீட்டின் மூலம் சமுதாயத்திற்கு மேத்தா உணர்த்துகின்ருர். இப்படிச் சமுதாயச் சிக்கல்களை, வாழ்க்கை உண்மைகளை வகைபடுத்திக் கூறும் கலைப்படைப்பைக் 'கலை வாழ்க்கைக்காகவே' என்று சொல்ல ஏது தடை ?

நெஞ்சையள்ளும் சிலம்பில், எல்லாவகைக் கலைகளையும் கற்றுத் துறைபோகிய பொற்ருெடி நங்கையாம் மாதவி, தான் தெரிந்து வைத்திருந்த கலைகளை எல்லாம் பிறரின் மகிழ்ச்சிக்காகத்தானே பயன்படுத்தினுள் ? தன் கணவன் பரத்தையர் இல்லம் செல்வதைப் பெண்கள் அனுமதித்தச் சமுதாயம் சிலப்பதிகாரக் காலச் சமுதாயம். இருப்பினும் வடுநீங்கு சிறப்பின் மனையகம் மறந்து, மாதவியிடம் விடுதல் அறியா விருப்பினன் ஆனதற்குக் காரணம் என்னையோவெனின், கலையின்மீது அவன் கொண்டிருந்த காதலே யாம். 'தலைக்கோலரிவை' எனும் சிறப்புப் பெற்ற கலைச்செல்வி யாம் மாதவி ஆடற்கலை, அழகுக்கலை, பாடற்கலை போன்றவைகளில் தேர்ச்சியுடைவளாக இருந்தமையால்தான் அவள்பால் மையல் கொண்டான் கோவலன். ஒருவன் எத்தனைதான் நற்குணங்களை உடையவனுக இருந்தாலும், உணர்ச்சி வயப்படும் ஒரு குறை அவனிடம் இருக்குமானுல், அவன் அழிய நேரிடும் என்பதைக் கோவலனும், ஒருத்தி எத்தகைய தூய்மை உடையவளாக இருப்பினும் கொண்டவன் குறிப்பறிந்து நடக்கத் தெரியா விட்டால் வாழ்வின் இன்ப துன்பங்களை இழக்க நேரிடும் என்பதைக் கண்ணகியும் ஒருத்தி எப்படிப்பட்ட திறமையுடையவளாக, பண்புள்ளவளாக இருந்தாலும் அவள் பிறந்துவிட்ட குலத்தின் பெயரால் சமுதாயம் அவளை ஐயக் கண்ணேடுதான் பார்க்கின்றது என்பதை மாதவியும், சிலப்பதிகாரத்தின் வழியாகக் காட்டி நிற்கின்றனர்.

தற்காலத் தமிழ்ப் புனைக்கதைகள் இன்றையச் சமுதாயத்தில் காணப்படும் சில சிக்கல்களை அனுதாபத்தோடு அணுகுகின்றன. "கால மாறுபாடுகளையும் சமூக மாற்றங்களையும், மனிதர் வாழ்க்கை முறைகளையும், அவர்களது மன ஓட்டங்களையும், பலதரப்பட்ட மனிதர்களது ஆசைகளையும்-கனவுகளையும், பலங்களையும்-பலவீனங் களையும், பெருமைகளையும்-சிறுமைகளையும், சாதனைகளையும்–சறுக் கல்களையும், குணநலன்களையும்–குறைபாடுகளையும், அவர்களது எண்ணங்கள், போக்குகள், நம்பிக்கைகள். போராட்டங்கள் முதலிய அனைத்தையும் சித்தரிக்க வேண்டியது நாவல் இலக்கியம் ஆகும்"[8] என்று திரு. வல்லிக்கண்ணன் அவர்கள் தமிழ்ப் புனைகதைகளின் இலக்கணத்தைக் கூறுகின்றார்கள்.

டாக்டர் மு. வ. அவர்களின் நாவல்களைப் படித்தோமானால் 'அகல் விளக்கு' வேலய்யனைப் போல, 'வாடாமலர்' குழந்தை வேலுவைப்போல நல்லவர்களாக வாழவேண்டும் என்னும் உணர்வு தோன்றுகிறது.

நா. பார்த்தசாரதியின் குறிஞ்சி மலர் அதனைப் படிக்கின்ற ஒவ்வொரு இளைஞனையும் 'நான் அரவிந்தனாக வாழ வேண்டும்' என்னும் தீர்மானத்தையும், ஒவ்வொரு பெண்ணையும் 'நான் பூரணி போல இலட்சியப் பெண்ணாக வாழ வேண்டும்' என்னும் உறுதிப் பாட்டினையும் மேற்கொள்ளச் செய்கிறது. அவரது பொன்விலங்கு நாவலில் வருகின்ற சத்தியமூர்த்தியைப் போன்றவர்கள் நம் மிடையே–கண் எதிரே, நாம் (மாணவர்கள்) வழிபட வேண்டியவர் களாகப் பேராசிரியர் வடிவங்களில் உலவிக் கொண்டுதானே இருக்கின்றார்கள் இத்தகைய சிறந்த சமுதாயத் தாக்கங்களை உருவாக்குகின்ற கலைப் படைப்புகளைக் கொண்டு, கலை சமுதாயத் திற்காகவே, வாழ்க்கைக்காகவே' என்று துணிந்து கூறலாம்.

"எல்லாச் சமூக மாற்றங்களும் முதலில் கருத்துக்களின் மூலம் தான் ஏற்படுகின்றன"[9] என்று ஆக்பர்ன் என்பாரும் நிம்காஃப் என்பாரும் குறிப்பிடுகின்றனர். சமூகத்தை மாற்றக்கூடிய கருத் துக்களை இலக்கியக் கலையின் வழியாகத்தான் பரப்ப இயலும் என்பது எனது கருத்து. இக்கருத்தினை மறுத்துக் 'கற்றவருக்கு

---

8 வல்லிக்கண்ணன் "தமிழ் நாவல்களில் மனித விமோசனம்" (பதிப்பாசிரியர் தி. பாக்கியமுத்து), கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1976, (முதற் பதிப்பு), பக் 73.

9 Ogburn and Nimkoff, A Hand-book of Sociology, Routledge and kegan Paul, London, 19:0, P. 583.

இலக்கியங்களின் மூலம் கருத்துக்களை பரப்பிவிடலாம். கற்காத மற்றவருக்கு எப்படி இலக்கியத்தின் மூலம் கருத்துக்களைப் பரப்ப முடியும் என்ற வினா எழுவது இயற்கையே வாய்மொழி இலக்கியங்களான நாட்டுப்புற இலக்கியங்களின மூலம் நல்ல கருத்துக்களைப் பாமரருக்கும் புரிய வைக்கமுடியும் என்பதே, அவ்வினாவிற்கு நான அளிக்கும் விடையாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றை நோக்குமிடத்து, அந்தந்தக் காலப் பின்னணிகளையும், அக்கால இயக்கங்களின் வரலாறுகளையும் நாம் கவனித்தாகவேண்டும். காந்திய, திராவிட இயக்க மார்க்சீயக் கருத்துக்களின் தாக்கத்தைத் தமிழ்ப் புனைகதை உலகில் நம்மால் காண முடிகின்றது.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நேரடியாக அதிகத் தாக்கங்களை ஏற்படுத்துவது இவ்விலக்கியங்கள்தாம கடந்த நாற்பது ஐம்பது ஆண்டுகளில் தோன்றிய குறிப்பிடத்தக்க எழுச்சிகளுள் அன்னிய ஆதிக்கம் அகற்றல், தீண்டாமை ஒழித்தல், குழந்தை மணம் ஒழித்தல், பெண்கள் விடுதலை, சாதி—சமய வேறுபாடுகளை ஒழித்தல், மதுவிலக்கு இயக்கம், ஜனநாயக மனப்பான்மை தோற்றுவித்தல், குறுகிய மாநில நேசியப் பார்வையை அனைத்துலகப் பார்வையாக மாற்றுதல் போன்றவை குறிப்பிடத்தக்கவை[10] என்பதாகத் திரு. அசோகமித்திரன் கருதுகிறார்.

''தமிழ்நாடு இன்றைக்கு எதிர்பார்ப்பது வாழ்க்கையை வளப்படுத்தும் கலையைத்தான். கலை கலைக்காகவே என்று சொல்லும் கற்பனைச் சித்தாந்தத்தை அல்ல''[11] என்ற மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் கூற்றும், கலை கலைக்காகவே என்று கூச்சலிடுவது அவ்வளவு உண்மையுடைய கோட்பாடு அன்று''[12] எனற அ. ச ஞானசம்பந்தம் அவர்களின் கூற்றும் இங்கு நினைவு கூறத்தக்கது.

---

10 அசோகமித்திரன் 'தற்காலத்தமிழ் நாவல்களில் வாழ்க்கையின் நிலையான நிலையற்ற பயன்களின் பிரதிபலிப்பு', ''இன்றையத் தமிழ் இலக்கியத்தில் மனிதன்'' (பதிப்பாசிரியர் தி. பாக்கிய முத்து), கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1972, (முதற் பதிப்பு), பக். 49.

11 தமிழொளி, வீராயி, தமிழர் பதிப்பகம், சென்னை 1947, முன்னுரை.

12 அ. ச. ஞானசம்பந்தன் ''இலக்கியக் கலை'' சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மார்ச், 1981 (மறுபதிப்பு), பக். 240.

முடிபாக,

(1) மக்களை மகிழ்வித்தல், அறிவுறுத்தல் என்னும் பணிகளை இலக்கியக்கலை செய்கிறது.

(2) கலையை எல்லாரும் அனுபவிக்கின்ற அளவிற்குச் சூழல்கள் உள்ளன.

(3) சமுதாயச் சிக்கல்களை அனுதாபத்தோடு இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

(4) பல சமூக மாற்றங்களுக்குக் கலை பயன்பட்டுள்ளது.

எனவே 'கலை வாழ்க்கைக்காகவே' என்ற கோட்பாடு உறுதிப் படுகின்றது என்பதனை வலியுறுத்தி எனது கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

—(×)—

பயன்படுத்திய நூல்கள்:

தமிழ்.

1 கலையும் சமுதாய வாழ்க்கையும். பிளெஹானவ். (தமிழில் ரா. கிருஷ்ணையா), முன்னேற்றப் பதிப்பகம் மாஸ்கோ, 1979.

2 இலக்கிய மரபு, டாக்டர் மு. வரதராசன், பாரி நிலையம், சென்னை, பிப்ரவரி, 1979.

3 ஒப்பிலக்கிய அறிமுகம், டாக்டர் தமிழண்ணல், சோலை நூலகம், மதுரை, நவம்பர், 1979, (நான்காம் பதிப்பு).

4 கறுப்புமலர்கள், நா, காமராசன், எம். ஏ., தமிழ் புத்தகாலயம் சென்னை, மே, 1980 (நான்காம் பதிப்பு).

5 கண்ணீர்ப் பூக்கள், மு மேத்தா. திருமருகல் பதிப்பகம், சென்னை, 1980 (ஐந்தாம் பதிப்பு)

6 கதம்பம், பச்சையப்பன் கல்லூரி தமிழ் முதுகலை மாணவர் வெளியீடு, சென்னை, 1973.

7 பாரதியார் கவிதைகள், பதிப்பாசிரியர்கள் டி. வி. எஸ். மணி; சீனி. விசுவநாதன், வானவில் பிரசுரம், சென்னை, ஏப்ரல், 1982 (மறு பதிப்பு)

8 கலிங்கத்துப்பரணி.

9 பாடல் 192, புறநானூறு.

10 தமிழ் நாவல்களில் மனித விமோசனம், பதிப்பாசிரியர் தி. பாக்கியமுத்து, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1976 (முதற் பதிப்பு)

11 இன்றையத் தமிழ் இலக்கியத்தில் மனிதன், பதிப்பாசிரியர் தி. பாக்கியமுத்து, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1972 (முதற்பதிப்பு)

12 தமிழொளி, வீராயி, தமிழர் பதிப்பகம், சென்னை, 1947, முன்னுரை.

13 இலக்கியக்கலை, அ. ச. ஞானசம்பந்தம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மார்ச்சு, 1981, (மறுபதிப்பு)

ENGLISH

1 Principles of Literary Criticism, Abercrombie.

2 Essays in Criticism–M. Arnold.

3 A Hand-book of Sociolcgy, Ogburn and Nimkoff. Routledge and kegan Paul, London, 1950.

—(×)—

திருநாள் வாழிய!

எழுநிறப் பரிகளைத் தேரினிற் பூட்டி
எழுந்திடும் பரிதியின் திருமுக முன்னே
கைத்தறி வினைஞர் கவினுற நெய்த
புத்தம் புதிய ஆடையை உடுத்திப்
பச்சரிசி தன்னைப் பானையி லிட்டுத்
இச்சைை யூட்டும் இன்சுவைக் கலந்து
மனைதொறும் "பொங்கலோ பொங்கலெ"ன்று
மனைதனில் மங்கையர் பொங்கிட வழங்கும்
காரிருள் போக்கும் கதிரோ னெழுமுன்
கருக்கலி லெழுந்து கழனியை வுழுது
காற்றினு மழையிலுங் கண்ணயர் வின்றிச்
சேற்றினி லுழைத்துச் செந்நெல் விளைத்து
உலகோர் பசியை அயராது தணிக்கும்
உலகியப் பொங்கற் றிருநாள் வாழிய!

—கா. அரசன்.

மரந்தை மகளிர்

க. சுப்பிரமணியன், எம். ஏ.,

இடம் : மரந்தை எனும் ஊரின் கடற்கரை

மாந்தர் : தலைவி, தோழி

நேரம் : மாலை

[தலைவி மணலில் அமர்ந்திருக்கிறாள், தோழி வந்து கொண்டிருக்கிறாள்]

தோழி : மரந்தை வாழ்க!

தலைவி : என்ன—'மறந்தாய் வாழ்க' என்றா சொன்னாய்? என்னை மறந்த தலைவரையா வாழ்க என வாழ்த்துகிறாய்?

தோழி : என்னை மறந்தாய் நீ வாழ்க! மரந்தையின் மாண்பை மறந்தாய் நீ வாழ்க! நம் மரந்தை வாழ்க! என்றுதான் கூறிக்கொண்டு வந்தேன்.

தலைவி : தாய் உட்பக்கம் நாய் வெளிப்பக்கம் காவல்! நள்ளிரவிலும் நம்மவர் நடமாட்டம் — என்னவருக்கு மனம் இரங்காத — மரம்போலும் மனங்கொண்ட மரந்தையை வாழ்த்துகிறாயாக்கும்.

தோழி : தலைவி—என் தமையனும் உன் தமையனும் யவனர் மரக்கலத்தில் மிளகுப்பொதி யேற்றிப் பொன்பெற்றுச் சென்று கொண்டிருக்கின்றனர். வழியில் என்னைச் சந்தித்தனர். எனக்கும் உனக்கும் புதுப்பொன் வளையல்கள் செய்து தருவதாகக் கூறினர். உன்னிடமும் கூறுமாறு வேண்டினர். அவர்களும் பிற ஆடவர்களும் மரந்தையின் கடல் வாணிகத்தால் கொழுத்த செல்வம் பெற்று நன்றிப் பெருக்கால் "மரந்தை வாழ்க" என்று ஒருவர்க் கொருவர் சொல்லிக் கொள்கின்றனர். அதைத்தான் நான் சொல்லிக் கொண்டே வந்தேன்.

தலைவி : பொன் வளையலும் எனக்குப் பொன் விலங்குதான்! பொன்னான தலைவருக்குக் காட்ட முடியாத பொன் வளையல் அழகை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

தோழி : மெய்தான் தலைவி. தலைவன் இல்லா நகரமும் நமக்குக் காடு போன்றதுதான்.

தலைவி : அவருடன் கூடின் மரந்தை நன்று. இன்றெனின் நன்றன்று.

தோழி : தலைவி — அதோ கீழ்த்திசையில் எழுகின்ற கதிர் மேற்றிசையில் விழுகின்ற கதிர் — ஒரே நேரத்தில் இரு காட்சி — இங்கே மணற்கடல் — அங்கே நீர்க்கடல் — நின் கண்போல் மலர்ந்த நெய்தல் மலர்கள் — தாழை யின் நறுமணம் — முரண்தொடைபோல அன்னமும் நீர்க் காக்கையும்! பரதவரின் மீன்கோட் பறை ஓசை! மகளிர்தம் விளரி யாழும் செல்வழிப் பண்ணும் மரந்தை யின் புன்னை மரங்களுக் கடியில்—இத்தனை இயற்கை யழகும் பெற்ற மரந்தை நமக்கு மட்டும் செயற்கை யழ காகத் தெரிகிறதே தலைவி.

தலைவி : வருணனையைப் பார்! பெரிய புலவர் என்ற நினைப்போ உனக்கு?

தோழி : புலவர் நானில்லையம்மா ... ... உன் தலைவர்தாம்! அன்று முழுமதி இரவில் உன் முகமதியைப் புகழ்ந்தாரே அப்பப்பா ...

தலைவி : சீ...... ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டா இருந்தாய்?

தோழி : ஒரு திருத்தம் — பார்த்துக் கொண்டிருக்க வில்லை. கேட்டுக்கொண்டு மட்டும் இருந்தேன்.

தலைவி : ம்...... ம்......

தோழி : மன்னித்துக் கொள்ளேன்... என்னதான் சொல்கிறார் என்ற ஆவல் ... நொடிப் பொழுதுதான் ... ... அதுவும் உனக்குக் காவலாகத்தான் நின்றிருந்தேன் ... யாரா வது வந்து விட்டால்......

தலைவி : நன்றி தோழி! மறுபிறப்பிலும் நீதான் எனக்குத் தோழியாக வேண்டும்.

தோழி : சரி வா! கடலருகே செல்வோம்.

[இருவரும் கடலருகே செல்கின்றனர்]

தோழி : எவ்வளவு பெரிய கடல் பார்! இரவிலும் நம்மைப் போல் துயிலாமல் புலம்பிக் கொண்டிருக்கிறது!

தலைவி : காமமும் இன்புறுத்தும் பொழுது கடல்போல இருக்கிறது. துன்புறுத்தும் பொழுதோ கடலைவிடப் பெரிதாக இருக்கிறது என்று நான் கூறவில்லை வள்ளுவர் கூறுகிறார்.

தோழி : ம்... ம்... காமத்துப் பாலா...? அப்புறம் என்னம்மா சொல்கிறார்?

தலைவி : கடல் உண்டு — தோணி இல்லை.

தோழி : அதோ தோணி

தலைவி : அதில்லையடி...
காமக்கடல் மன்னும் உண்டே; அது நீந்தும்
ஏமப்புணை மன்னும் இல்.

தோழி : அம்மாடி... கடலில் மூழ்கி விடாதே... உன் தாயும் தமையனும் என்னை விடமாட்டார்கள்.

தலைவி : தாய், தமையன், நாய், காவலர், நிலவொளி எத்தனை தடைகள் அவருக்கு ... ...? அவர் வரவில்லை என்று அவரை நொந்து கொண்டாயே ... எப்படி வருவார்?

தோழி : அவர்தாம் வந்து தீரவேண்டும்... நாமா அங்குப் போக முடியும்? அதோ பார் அழகிய நாரைகள்

தலைவி : ஆம்... அருகில் சென்று காண்போமா?

தோழி : ஆம் தலைவி... சிறிது நேரமாவது கவலையை மறக்கலாம் வா!

[இருவரும் தண்ணீர் அருகில் நிற்கின்றனர் நாரைகள் பல அயிரை மீன்களைப் பற்றுகின்றன.]

தலைவி : தூய வெண்சிறகு நாரைகள்... பவளம் போல நாரையின் செவ்வாய். தினைத்தாள் போலும் சிறிய பசுமையான கால்கள். சிறகின் இடையேயுள்ள தூவி செந்நிறமாக இருத்தலின் புலவர்கள் முள்ளு முருங்கை

யின் மலர்களை உவமை கூறுவார்கள் என்பது உமக்குத் தெரியுமா தோழி?

தோழி : எனக்கு இன்னும் ஒரு புலவர் காதலராக வாய்க்க வில்லை யம்மா...

தலைவி : எப்போதும் எள்ளல்

தோழி : தலைவி... நீ நாரையின் அழகை மட்டும் கண்டுரைத் தாயே அதன் செயலைக் கொஞ்சம் பாரேன்... நான் அதன் செயலைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்.

தலைவி : அப்படியென்ன செயல்? மீன் உண்ணும். அதுவும் அயிரை மீன் என்றால் கொண்டாட்டம். அதிலென்ன பார்க்க வேண்டிய புதுமை இருக்கு?

தோழி : நன்கு பாரேன்; அயிரை மீனை எப்படி உண்கிறது என்று,

தலைவி : ஐயோ பாவம் நாரை ஏமாந்து விட்டது. பக்கம் வந்த அயிரையை அலை இழுத்துக் கொண்டு ஓடுகிறதே...

தோழி : அதோ பார்! நாரை விடுகிறதா என்று? ஓடிச் சென்று அயிரை மீனை அலகால் பற்றி உண்பதை

தலைவி : 'முயற்சி திருவினை யாக்கும்' அல்லவா?

தோழி : போதும்மா புலவர் காதலியே — தொட்டதற் கெல்லாம் திருக்குறளா?

தலைவி : 'திருக்குறளே தமிழரின் குரல்' என்று அவர் சொன்னார்.

தோளி : சொன்னால் மட்டும் போதுமா? அதன்படி நடக்க வேண்டாவா? நாரைக்குள்ள முயற்சி......

தலைவி : யாரைக் குறை கூறுகிறாய்? நிறுத்து.

தோழி : பிறகென்ன தலைவி. மீனைப் பிடிக்க நாரை எவ்வளவு பாடுபடுகிறது பார்த்தாயா? காவல் மிகுதி என்பதால் வராமல் இருக்கிறார் என்பது சரியா? நாரையைத் தேடியா மீன் வந்தது? மீனை

நோக்கியன்றோ நாரை ஓடி இடம் பார்த்து நேரம் பார்த்து ஏவல் புரிந்து வென்றது! அதுபோல் தலைவனும் முயன்றால் திருவினையாகாமலா போகும்? தலைவனைத் தேடி அவன் மலைக்கு நாமா போக முடியும்? நாரை மட்டும் தாமதித்திருந்தால் நீர்க்காக்கை அன்றோ அயிரை மீனைப் பற்றியிருக்கும்.

தலைவி : [துணுக்குற்றவளாக] தோழி என்ன சொல்கிறாய்? புரியும் வண்ணம் சொல்.

தோழி : புலவர் காதலி புரிந்து கொண்டு விட்டதை முகம் காட்டுகிறதே... தலைவன் உன்னை வந்து கூடாமலும் மணம் புரியாமலும் காவல் நீட்டித்தால் உன் பெற்றோர் உன்னை வேறு யாருக்கேனும் மணம் புரிந்து கொடுத்து விடுவார்கள்.

தலைவி : [கண் கலங்குகிறாள்]

தோழி : அடியம்மா அழாதே...... உன் கண்ணீர் என் நெஞ்சைச் சுடுகிறது. நான் உயிருள்ளவரை இன்னொருவன் உன்னை மணக்க முடியாது. உன் தாயின் தோழியல்லவா என் தாய்? என் சொல்லை உன் தாய் மதிப்பார். எனவே கலங்காதே. உன் காதலருக்கு நேற்று ஓலை கொடுத்து அனுப்பியுள்ளேன். ஓலை கொண்டு சென்றவனும் என் பெரியப்பா மகன்தான்.

என் உயிரைப் பணயம் வைத்தாவது உன் காதலரை உனக்கு மணமுடித்து வைப்பேன்.

உன் பெற்றோர் ஒருவேளை இசையாவிடின் நான் தற்கொலை செய்து கொண்டு இறந்து விடுவேன். அதைப் பார்த்த பிறகாவது அவர்கள் மனம் திருந்தட்டும்.

தலைவி : ஐயையோ... அப்படி எதுவும் நடக்கக் கூடாது. தற்கொலை செய்யமாட்டேன் என்று கையடித்து வாக்குக் கொடு — நீ சொன்னதைச் செய்து விடுவாய்!

தோழி : தற்கொலை நாடகமாவது போடலாம் அல்லவா?

தலைவி : நாடகமும் வேண்டா. நாடகத்தில் கூட நீ இறப்பதை என்னால் தாங்க முடியாது...... முதலில் வாக்குக் கொடு.

தோழி : வாக்கு இல்லை. பாக்கு வெற்றிலை தருவேன். உன மணம் பேசி முடித்த பிறகு — சரி நேரமாகிறது வா போகலாம்.

[இருவரும் போதல்]

இந்நாடகம் கீழ்வரும் பாடலைக் கொண்டு இயற்றப் பெற்றது.

தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரை பெயர்ந் தயிரை யாரும்
ஊரோ நன்றுமன் மரந்தை
ஒருதனி வைகிற் புலப்பாகின்றே.
—குறுந்தொகை: 166.

—(×)—

இலக்கிய வளர்ச்சிக்குத் தேவை...?

நாவல் இருக்கும்போது நாவலையே படித்துவிட்டுப் போகிறோம். திறனாய்வு எதற்கு என்று சிலர் கேட்கலாம்,

சாதாண வாசகருக்கு நாவலில் பொதிந்துகிடக்கும் அழகுகளையெல்லாம்—அர்த்தங்களையெல்லாம் வெளிப்படுத்திக் காட்டவல்லவர் திறனாய்வாளரேயாவர். அவரால்தான் அது முடியும். ஆண்டு தோறும் வெளிவரும் ஆயிரக் கணக்கான நாவல்களை எல்லாரும் படித்துவிட முடியாது. அச்சியந்திரப் பெருக்கமும், வாணிக நோக்கமும் மிகுந்த இக்காலத்தில் இத்துறையிலும் போலிகள் அதிகமாகி வருகின்றன. அசலைவிடப் போலிகட்கே கவர்ச்சி மிகுதி. கவர்ச்சி மிகுந்த வெறும் பொழுதுப் போக்குப் படைப்புகள் மன வளர்ச்சி பெறாத எளிய வாசகர்களைக் கெடுத்துவிடலாம். வெளிவரும் நாவல்களில் நல்லனவற்றை இனம் கண்டு — போலிகளைப் போலியே என்று எடுத்துக் காட்டும் பெரும்பணியில் திறனாய்வாளர் ஈடுபடுகிறார். இத்தொண்டு இலக்கிய வளர்ச்சிக்குத் தேவையல்லவா?

—மா. இராமலிங்கம்,
நாவல் இலக்கியம்.

பாஞ்சாலி சபதம்

கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

'பாஞ்சாலி சபதம்' எனும் காப்பியம் ஐந்தாம் வேதமாகப் பாவித்துப் போற்றப்படும் வியாசரது பாரதத்தின் கருத்தைப் பெரும்பாலும் தழுவிச் செல்வதினுன், கவியரசராய பாரதியார், அதற்கேற்ப, தன் பக்திப்பண்பின் பரிவினை எடுத்துக்காட்டும், இறைவணக்கப் பாடல்களை வேதசாரத்தையொட்டி, ஞான எண்ணத்திற்கு ஊட்டமிடும் வகையில், தம் காவியத்தை மிளிர வைத்தார். குறிப்பாக, கண்ணிலும் சால இனியராய கண்ணன், பராசக்தி, அரி ஆகிய இறை திருவருட்கு ஆளாக்கும் இசை நலந்தழீஇய பண் சுமந்த பாக்கள் இதன் கண் மலிந்துள்ளன. மற்றும் மெய்யுணர்விலும் கடவுணிலை யுணர்விலும் தலைப்படுத்தும், தேனூறுந் தெய்வத்தமிழ்ப் பனுவல்கள், விழுமிய நோக்கோடு அருளுரு நிலையின் நுகர்வை, பல உவமங்களாலும் பழ மொழிகளாலும் பொருண்மொழிகளாலும் மறத்தற்கரிய பூட்கைகளாலும் புலப்படுத்தி நிற்கும் சிறப்பு வாய்ந்தவை. இதன்கண், சீர்களும் அடிகளும் நெஞ்சை நெகிழ வைக்கும் பான்மையில் இயைந்து, மந்திர வலியும் மங்கள ஒளியும் வாய்ந்து மிளிரும் சுருதி மொழிகளையும், உயரிய வேதாந்தப் பொதுமையின் ஞான நாட்டங்களையும் காண இயலும். ஆபத்தின்கண் காக்கும் இறையருட் காட்சி, இக் காப்பியத்தின் இதயமாக விளங்கும் பெற்றிமையினை யுடையதாதல் பற்றி, அக்காட்சியினைப் பாரதியார் விளக்குமுகத் தான் அருளுணர்வின் பிழம்பினையே காட்சிப்படுத்தி, அருட்டிறத்து தெய்வலிமையினை விளக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் எளிதாக உதவும் முறையில் எழிலுற காவிய வேதத்து இன்பத்தைப் புலப்படுத்தி யுள்ளார். இறைதத்துவத்தின் நிலைக்களமாக காப்பியத்தைப் பாரதியார், வேதசாரத்தோடு அமைத்தமையால், இது காப்பியக் கலைச் சிறப்போடு தெய்வீகப் பண்பிற்கு வழிகோலுவதாயுள்ளது. மற்றும் சிந்தைக்கு எட்டாத இறைப் பொருளின் உருவினையும் அதனோடு விளையும் அருட்கருணையின் அழகினையும் பாரித்துரைப்ப தால், இக்காப்பியம் மக்களை அன்பு வழியிலும் இன்ப நெறியிலும் இயங்க வைக்கும் பெற்றியும் வெற்றியும் வாய்ந்துள்ளதென்பது ஒரோவழி அறியப்படும். எனவே, இது பாரதியாரது பக்தி அனுபவத்தில் பிழிந்தெடுக்கப்பட்டதோர் சாறுமாகுமென்க இஃதனைனன்றே, தன் காவியத் திறத்தாலே வையத்தைப் பாவிக்கும் பாரதியார், தமிழ் மக்களது உள்ளங்களிலே, உயிர்ப்பொருளாய் இயங்கி, புகழ் மணங்கமழ உலவுவது கண்கூடாகும். பாரதியாரின்

திறமான காப்பியப் புலமைக்கும் அவரது கவியுள்ளத்திற்கும், இந்நூல் சான்றுபகருவதினுன், ' பாஞ்சாலி காப்பியத்திற்கு நிகர் அதுவேயாமென, அஞ்சலி செய்வது தகும்.

நாடறிந்துள்ள பாரதக் காதையின் மூலமாக பாரதியார் 'பாஞ்சாலி சபதம்' எனும் காவியத்தை உருவாக்கி, அதனிலே உண்மை தோய்ந்த நாட்டு விடுதலையுணர்வினையும், பெண் விடுதலை யுணர்வினையும் உலகு உவக்கும் முறையில் வெளிக்காட்டியுள்ளார். பாரத நாட்டுக்கு ஏற்பட்ட சாபத்தை பாஞ்சாலி சபதம் போக்குகிற வகையினையும் உணர்த்திவிடுகிருர். காவியத் தலைவியை, வலியிழந்து வாடும் பாரத பூமியின் தேவியெனக் கொண்டு, அத்தேவியார் மூலம் சுதந்திரயெழுச்சி வேகத்தையும், விடுதலை வேட்கையினையும் சுட்டியுள்ளார், மக்களுக்கு தேசபக்தி மேலோங்கும் படி, அதனை அறிவுச் சுவை வகையில் புகட்டி, பாரதநாட்டு பண் பாட்டின் மரபுவழி மென்மையாக ஊட்டி விடுகிருர். இவ்வண்ணம் பாரதியார் தாம் வாழ்ந்த காலத்தின் சூழ் நிலையினை யொட்டி வியாசரையும் வில்லியையும் தழுவி, பழமையினை மறவாத புதுமையும் புரட்சியும் விளங்கத் தோன்ற காவியம் படைத்துள்ள திறம் மூக்கின் உச்சியிலே சுட்டு விரலினைச் சேர்த்து வியக்கத்தக்கதாம்.

தமிழ் இலக்கண முடிபு காட்டும் தொல் காப்பியத்திற்கு, இக் காவியம் மாறுபட்டதல்ல தென்பது தமிழறிஞர்கள் கருதுவர். தொல்காப்பியர் கூறும் ஒன்பான் சுவைகளுள், பெரும்பான்மையாக காவியங்களில் பெரிதும் சிறப்பாக பல்கி வருவன எண்சுவைகளே உள்ளத்தைக் கவர்ந்து ஈர்க்கும் காப்பியத்து எண் சுவைகளுள் சிறப்பாடு தோன்ற வழங்கப்படும், உவமை, அவலம் பெருமிதம் ஆகிய இயல்களைக் கொண்டு கம்பர் போன்று, பாரதியார், பாஞ்சாலியின் மேம்பாடுடைய குண நலத்தினையும், செயல்களையும் புலனுக்கி, முக்கியமாக அவலச்சுவையின் வடிவாகவே, காப்பியத் தலைவியை, நெஞ்சத்தை உருக்கியள்ளும் வண்ணமாக சித்தரித்துள் ளார். மற்றும் துன்பச் சூழலில் துயரினைக்கண்ட துருபதன் மக ளாய் வயங்கிய காப்பியத் தலைவி, எவ்வாறு வான்புகழினையெய்தும் இறைமகளாகத் திகழ்ந்தாரென்பதையும். பாரதியார் எண்சுவை களாலே உணர்த்தியது அறியப்படும் அச்சுவைகளின் வழி, பெண்மையில் மறைந்து கிடக்கும் உண்மைகளைக் கிளக்குமுகத்தான் இன்பச் சுதந்திர உணர்வையும் நாட்டு விடுதலையின் பண்பினையும் மொழி விடுதலை, பெண் விடுதலை, பொருளாதார விடுதலை மூலம், பாரதியார் விளங்கக் காட்டி, தண்மை கலந்த அருளோடு வெம்மை சிறந்த வீரக்காட்சியினை நிலையாக்கி, உலகில் மாசு நீங்கி இழிவு அழிய, உண்மையினை நாட்டி கடமையினை வளர்க்கும் வாய்ப்பினை மக்களுக்குத் தெரிய வைத்து விளக்கியுள்ளார்.

மன்னுயிர்க்குப் பொதுவாயுள்ள ஒன்பான் சுவைகளுள், காப்பியத்தின்கண், சிறப்பு கருதி கையாளப்படும் எண்சுவைகளோடு சமநிலையெனும் சுவையினைச் சேர்க்கச் சுவை ஒன்பதாகும். உலகியல் நீங்கி நின்று தருமநெறி யறிந்தார் இயல்பினைக் கூறுவது சமநிலையாகும். இது பெரும்பாலும் ஒப்புகாணுவதற்கு இன்பம் இழிப்பு என்பவைகளோடு தழுவியும் ஒட்டியும் உணரப்படுவது 'தக்க செய்கை செய்தால் அது தருமத்துக்கு ஒக்கும்' என வலியுறுத்தும், இச்சுவை, பாரதியாரது காவியத்து வேதச் செல்வராய வீட்டுமாச்சாரியன் புகழ்ச்சொல்லில் (சபதச் சருக்கம்: 56–80) சிறப்பாகத் தவழ்ந்தும் திகழ்ந்தும் பொலிவதைக் காண்மின்

'செல்லும் நெறியறியார் செய்கையிங்குப் பார்த்திடிலோ
கல்லும் நடுங்கும் விலங்குகளும் கண்புதைக்கும்
செய்கை அநீதி யென்று?

ஈங்கு, மனதைப் பொறிவழிப் போக்காது, அறிவுவயப்பட்டு நிற்கும்படிமுயன்ருல், மனம். இறை, உலகு உயிர் எனும் முப்பொருள் இயல்கனை இயல்புடன் சமநிலையில் ஆய்ந்து ஒரு நெறிப்பட்டு சுவையுடன் இயங்குவதைத் தொல்காப்பியர் கருத்துக்கேற்ப பாரதியார், சமநிலைச் சுவையினைப்பற்றி உணர்த்துவது சாலவும் உள்ளங்கவர்வதாகும்

பாரதியார் தம் கவிக் கனவில் ஆழ்ந்துள்ளபோது. பராசக்தியே, கவிதா தேவியாக விளங்கி தன் நாவில் பேசத் தொடங்கியதும், எழுதுகோலைப் பிடித்து தனக்காக காப்பியக் கவிதையினை செய்ததுமாகிய குறிப்பினைத் தம்பாக்கலில் அறிவித்துள்ளார். பாரதியார் ஓர் அருட்பெருஞ் சாக்தராதலால், பாஞ்சாலியைப் பராசக்தியெனக் கொண்டு தன் காப்பியத்தை இயற்றியுள்ளார். பராசக்தி காதலை, பாரதியாரது சிந்தையிலே சிறந்து நிலை நிற்குமாறு உள்ளும் புறமும் ஒருங்கே வளர்த்தது சிலப்பதிகாரமென்க

'வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்.
... ...
'அரி அரன் பூமேலோன் அக மலர் மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகியே நிற்பாய்.
... ...
'கங்கைமுடிக் கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கையுருவாய் மறையேத்தவே நிற்பாய்
(சிலம்பு: வேட்டுவ வரி)

என்ற சிலம்பு அடிகளிலே பராசக்தியின் மூலம் ஒலியினைக் கேட்டு, அச்சக்தியருட் சித்திரத்தில் பாரதியார் ஆழ்ந்தவர். அவரது

கண்ணில்வரும் பராசக்தி மங்கை, ஆற்றல் கொண்ட நல்லருளினால் ஒரு கன்னிகையாகி, உலகினோர் தாயாகித் தோன்றினாள், தோன்றவே, பாரதியார் ஓர் சித்தராய் வயங்கி பராசக்திக்கு ஆட்பட்டு, மனங்குழைந்து மந்திரம் போல் விளங்கும் சொன்னலம் பெற்று வீர அருட்கவியாக சக்திக் காதல் வெள்ளத்தில் திளைத்தார். களையிழந்த நாட்டில்பாரத தருமம் விளங்கி ஓங்கவும், ஒற்றுமைகள் இணங்கி உய்யவும் சிறக்க வந்தனையெனச் சக்தியினைப் போற்றி வரக் கவியாய்த் திகழ்ந்த பாரதியார்

'வாராய் கவிதையாம் மணிப்பெயர்க் காதலி
வந்தெனக் கருளுதல் வாழி நின் கடனே'

எனத் தொழுவாராயினர். இவ்வண்ணம் கவிதைத் தேவிபால் வேண்டி நின்ற பாரதியார் தன் கண்ணியத்தையும் காப்பாற்ற, இமைப்பொழுதும் சோராது, சமுதாயத் தொண்டராய் நாட்டுக்கு உழைத்தலும், கவிதைத் தொழில் புரிதலும் தன் கடன்மையாக வாழ்வின் தெய்வீக சக்தியாகிய முயற்சியினை நன்காற்றும் செம்மையுள் தலை நிற்றலையும் பாரதியார் மறந்தாரில்லை.

'உமைக் கவிதை செய்கின்றாள், எழுந்து நின்றே
உணர்த்திடுவோம் பல்லாண்டு வாழ்க'

என பாரதியார் தெளிய வைத்துள்ளதையும் ஓர்க

பாரதியாரது கவியுள்ளம், கவிதாதேவியை பாஞ்சாலியாகப் பாவித்து, மானிடர் காணும் காவியத்தலைவியாக, நிலமிசை கால நிலைக்கேற்ப, ஒரு பெருஞ்செயல் செய்ய,முனைந்தது அதனால் புத்தம் புதுமையாக பாரதியார் காப்பியக் கலையை ஒரு பெருஞ்சித்தாக தோன்றச் செய்து காப்பியத் தலைவியையும் செந்தமிழ்ச் சுவை யாளாக, விளங்கும்படி காட்டி விடுகிறார். மற்றும் அவரது காவியக் கருத்துக்கள் அறத்தின் அடிச்சுவட்டிலும், தெய்வ ஒளி கொண்டு துளிர்ந்து உயிரோடு கலக்கும் சமய ஞானத்து அடிப் படையிலும் எழுந்தவை. இதன்வழி பாரதியார் தமிழறமும் நீதியும் வேதாந்தச் சுவையோடு தழைத்தோங்கி நிலைக்க வேத உண்மைகளை, தமிழமுதின் சுவையில் மக்கள் இயல்பாகவே கண்டு கொள்ளும்படிச் செய்துவிடுகிறார். மற்றும் பாரதியார் நாராயண சித்தாந்தத்தின் துணிபினை விளக்கி, யாவும் நாராயணமய மென பதைச் சித்தத்தில் தெளிவுற விளங்குமாறு சுருதிமொழியால் உணர்திவிடுகிறார். 'உண்மையால் நோக்குங்கால், நாராயணன் என்பது அவயவப் பொருள்பற்றிக் காரணக் குறியாய் நின்றே பரமசிவனை உணர்த்தும்' என சிவஞான சுவாமிகள் சிவஞான போத மாபாடியத்துள் எடுத்துக் காட்டியுள்ளது ஈண்டு சிந்திக்கற் பாலது மற்றும் அவரே, 'நரருடைய தொகுதி நாரம்' எனக் கொண்டு, 'நாராயணன் என ஒருமொழியாய், உயிர்த்தொகையை

ஒத்து நிற்பன் எனும் பொருட்டாய்க் காரணக் குறியாயவாறு காண்க' என விளக்கிச் சுட்டியதும் உணரப்படும்,

ஞாயிற்றின் ஒளி அறிவுக்கினிய ஆற்றலை அளித்து உயிரினை நித்திய வாழ்விலே நிலைபெறச் செய்யும் மாண்பினை, காவியக் கருத்துப் புலப்பாட்டிற்கு ஏதுவாக பாரதியார் எடுத்துக் கூறியுள்ளார் இதற்காக இயற்கைக் காட்சி அமைப்பினை, நாடக காப்பியத்திற்கு இன்றியமையாததாய், இருக்கும் தகுதியொடு காவியக் கருத்து வளர்ச்சிக்கு உதவும் வகையில், பாரதியார், நாடகப் பயனையும் உலகியல்வாழ்வுக்கு உகந்த தத்துவ முறையில் திகழுமாறு உணர்த்தியது கற்போரின் உள்ளத்தையும் கருத்தையும் கவரவல்லதாகவு முள்ளது. மேலும் இயற்கைச் சூழலின்வாயிலாக பாரதியார், கருமப்பயனை விளக்கி. துன்பம், இருள் அறியாமை, பேதைமை, அச்சம், மடம் போன்ற தன்மைகள் அகல வேண்டி மனிதமனம் எவ்வாறு விடுதலை விரும்பி இறைநிலை யுறுவதாக அறிவுறுத்தி, அது பின்னர் நிறைபெறுவதையும் காப்பியத்தில் வலியுறுத்திக் காட்டியுள்ளார். இக்காவியத்தில், இறையியலினையும், இறைமைஞான உண்மையினையும் கூறும் பகுதி, இறைபால் அன்புற்றோர் பெரிதும் சுவைத்து இன்புறற்பாலது. இதனில் பரமுக்தி நிலையினைப் பெறுதற்குரிய பதஞ்சலியின் யோக உளவுகளை வேதசாரத்தோடு புதுமெருகில் பாரதியார் எடுத்தியம்பும் திறத்தினிலே, இறைமையி னருளாட்சி இயங்குவதைக் காண இயலும். மற்றும் தெய்வ மாண்புடையார் எத்தகைய ரென்பதையும் (81–83 பாக்கள்) அன்னார் ஓர்ந்துணரும் ஞானத்தால் இயற்கையின் இயக்கமும் அதன் சங்கிலி யொக்கும் விதியின் செயலைப்பற்றியும் கற்றுணர்ந்து கொளற்பாற்று.

'நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும்; சிற்றெறும்பால் யானைசாகும்;
வரிவகுத்த உடற்புலியைப் புழுவுங்கொல்லும்;
வருங்காலம் உணர்வோரும் மயங்கிநிற்பர்;

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும் எனும் வள்ளுவர் கூறும் அறத்தை பாரதியார் இக்காப்பியத்தின் மூலமாய் மொழிந்து ஊழின் திறத்தை வலியுறுத்துகின்றார். ஊழ்வினை உருத்துவந்தூட்டும் என்பதும் இவர் கொள்கையாகும். இதன்வழி, விதிபாழ்படாது பாரினில் வாழ்வுபெற்று ஆற்றலோடு நிலைத்து நிற்பதும், தோன்றி அழியும் வாழ்க்கையில் இன்பும் துன்பும் வெறுமையென்பதும், இயங்கும் சக்திகள் நடத்தும் நாடகத்தில், எல்லாமாகி நிற்கும் இறைமையின் அலகிலா ஞான விளையாட்டினை மனிதஉள்ளம் எண்ணி வியப்பதைத்தவிர வேறு

யாதுளது என்ற உண்மையினை காப்பிய உணர்வோடு பாரதியார், இறைமை இணைப்பால் தெளியவைத்தது போற்றற்குரியது.

இறையருளினை யெய்தும் புலமை நலமுடைய பாரதியார், முந்தி நிலவிய காப்பியங்கள் யாவையும் ஆய்ந்துணர்ந்து, தமிழகத்து தத்துவமும் சமயமும் தமிழ்மக்களது சிந்தனையில் நுட்பமுறத்தழுவி இணைந்து செல்லுமாறு, 'பாஞ்சாலி சபதத்தை' செம்பொருள் நுவலும் காப்பியமாக அமைத்து, அதன்கண் மனஉணர்ச்சியும், மறவுணர்ச்சியும், மானஉணர்ச்சிபும், மகிழ்வுணர்ச்சியும், அவல உணர்ச்சியும் தோன்றுமாறு திகழவைத்தார். இதனால் இது வாழ்விற்கு வளனும் உரமும் உறுதியும் தரும் உயிர்க்கலைக் காப்பியமாக வழங்கியுள்ளது. மற்றும் இது நாடக நடைப்போக்கு முடைய தகுதியால சிறக்குமாறு, பாரதியார், தன் மெய்ப்பாட் டுணர்வினுக்கும் காப்பியப் புலமைப் பண்பினுக்கும், படைப்புத் திறனுக்கும் ஏற்ப ஓர் அற்புதநாடக உருவினையும் கருத்துப்பட அளித்து விடுகிறார். இந்நாடகம் செயலோட்டம் பெற, இதனை அழைப்புச் சருக்கம்? சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துயிலுரிதற் சருக்கம் சபதச் சருக்கமென ஐவகைப் பிரிவுகளையுடைய தாகப் பாரதியார் படைத்துள்ளார். நாடகமாந்தரும் மாதரும் ஆகியோரது உரையாடல் வாயிலாக, மெய்பாட்டுணர்வுகள், அள வோடு தத்துவக் கருத்துக்களுடன் மிளிர்வதைப் பாரதியார் உணர் வாற்றலுடன் தெளிவுறுத்துவது கூர்ந்து கவனித்து இன்புறற் பாலது.

பாரதியார், தன்காப்பியத்தை இளங்கோவின் நாடக இலக்கண மும், காவியஇலக்கியமும் அடித்தளமாக அமையும்படி இயற்றி யுள்ளார். காப்பியக்கதை நிகழ்ச்சியினை உண்மைபட காட்டுவதற் கும், கற்பாருள்ளத்தைக் கவருவதற்கும் உரியவகையில், பாரதியார், இளங்கோவைப் போன்று, பலமெட்டுகள் கொண்ட சிந்துவகை களையும், தெய்வமணங்கமழுமாறு பல இசை அளவையுடய பாக் களையும் பெருவரவினவாகவும், கதை நிகழ்ச்சிகளின் அருமைகளை யும் அழகுகளையும் திறனுடன் வாழ்வியலுக்கேற்ப எடுத்து விளக்க வல்ல பல்வேறு இசை வடிவங்களைக் கொண்ட இறையியலுடைய இனிய பாக்களை சிறுவரவினவாகவும் பயன்படுதற்குரிய அறநெறி முறையில் சிறப்பாகத் தோன்ற வைத்துள்ளார். வியப்பெய்தும் வண்ணம், இந்நாடகக் காப்பியம், சிலப்பதிகாரத்தைப் போல, மிகவும் நீளாமலும், அதிகப்பட குறையாமலும், கற்பார் அளவில் மகிழ்ச்சிகொண்டு சிறிதும் சலிப்படையாதவாறு யாப்பாற்றலுடன் அமைந்துள்ளது. மற்றும் கதை நிகழ்ச்சியின் போக்கு சூழ்நிலைக் கேற்ப, அறமும் அறிவும் அரணுகப் பாங்குடனே தோன்ற, காலக்

கணக்கின் வரையறைக்குட்பட்டு ஆற்றொழுக்கு நடையில் வேதாந்தச் சுவை ததும்பும் சிறப்புடன் இயைந்து செல்லும் நீர்மையுடையது.

இக்காப்பியத்தில், நாடகச் சிறப்பிற்குரிய கம்பரின் கவிச் சித்திரத்தைக் காணலாம்; வள்ளுவப் பெருந்தகையின் ஞானத் தெருளினை இதனில் ஆய்ந்து பிறவிப் பயனை எய்தலாம்: வேர்ட்சு வொர்த் (Words worth) வழங்கும் இயற்கையழகு அணிந்து நிற்பதை இதனில் தெளிந்து அமைதியுறலாம்: இதனில் நன்மையும் தீமையும் ஒன்றையொன்று எதிர்த்து வல்லமராக முற்றிய போராட்டத்தை மில்டனின் (Milton) 'இழந்த சுவர்க்கத்தில்' உணரலாம்: இதனில் மண்ணக வாழ்வினை, வளமையும் சீலமும் பெருக்கி விண்ணக வாழ்வாக ஆக்கிவிடும், வாக்குத்தெளிவுடைய வால்ட் விட்மனின் (Walt Whitman) இறைமை ஞானத்தியலை உணர்வு முறையில் அனுபவிக்கலாம். எனவே இவைகளின் வழி மந்திரக்கவித்துவஒளி மிளிர, உளத்தினை மகிழ்ச்சி யூட்டும் வகையில், கருத்தாழமும் தெளிவும் சுவையும் நயமும் தோன்றுமாறு பாரதியார் புதுமை காட்டும் நாடகக் காப்பியத்தைக் காப்பியப் பண்புடன் பொருத்தமுறைப் பொலிய அமைத்துள்ளார். எனவே, பாரதியாரது காப்பியப் புலமைக்கு, 'பாஞ்சாலி சபதம்' தக்கதொரு கட்டளைக் கல்லாகும்,

பாரதியார், 'பாஞ்சாலி சபதத்தில்' இயற்கையினைப் பற்றிக் கூறுவது ஒரு தனி காவியச் சிறப்பு வாய்ந்தது, இயற்கையின் காட்சி அமைப்பினை நாடக காப்பியத்திற் இன்றியமையாதிருக்கும் தகுதியோடு பாரதியார். தான் கொண்ட காவியக்கருத்துக்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் தெளிவுறுத்துவாராயினர் உலகத்து இயற்கைக் காட்சிப் பொருள்களின் மீதும் மற்ற உயிரினங்கள் மீதும், மக்களது உறவினைப் பலப்படுத்தி புலப்படுத்துவது இறைமைதான் காரணமென்பது பாரதியாரின் உண்மைக்கருத்து. அதனுல் இயற்கைப் பொருள்களில் இசைந்தும், காக்கைக் குருவி போன்ற எல்லா உயிரினங்களில் மறைந்தும் நிற்பது இறைமை என்பதை பாரதியார் உணரவைத்து, இறைமைதான் நம்முயிராகவும் உள்ளதென ஓர்ந்துணரும் அனுபவத்தைத் தன் கவிதை வழி பெறவைத்தார். எனவே இயற்கையின் மூலமாக, மக்கள் இயற்கை அழகினைக் கண்டுணர்ந்து ஆன்ம விடுதலையினைப் பெறுவதும் பாரதியாரின் காவியச் சிறப்புமாகும். இயற்கை யாதொன்றும் வஞ்சகம் புரியாதென்பது பாரதியாரின் உட்கோள். அதனுல் பாரதியார் இயற்கைப் பொருள்களை நன்க்றிந்து ஆய்ந்து உவமிக்கும் அறிவின் மாட்சியினைப்பெற்று மேம்பாடுடையராய் விளங்கி

யுள்ளார். மற்றும் மாலைப்பொழுது போன்ற எழில் குலுங்க இலங்கும் இயற்கைக் காட்சிகளைப் பாரதியார் ஓவியமாகக் காவிய உணர்வுடன் காட்டும் 'கண்ணுள் வினைஞராய்த் திகழுங்காலை, அவரது சொற்கள் அவரது கருத்தையும் எண்ணத்தையும் தாமே முனைந்து முன்னின்று நிற்பதுபோல் தோன்றுவதைக் காண இயலும்.

இயற்கை அன்னையின் வன்மையையும் பெருங்கருணையையும் மகிழ்ந்த பாரதியார், அதனை வண்ணமுகங்காட்டும் பராசக்தியாக வும் கண்டுகளித்து வியந்த வண்ணம். மக்கள் இயற்கையுடன் பொருந்திவாழும் இன்றியமையாமையினை உணர்ந்தார். உணர்ந்தவழி, மக்களுணர்ச்சிகளை இயற்கைப் பொலிவோடு நட்பிட்டுக் கூறுவதில் திறமைவாய்ந்து, உலக இயற்கையும் மக்களது வாழ்க்கையும் ஒன்றற்கொன்று நிழல்போல் ஒட்டியே விளங்க, பாரதியார் காவியத்தை அமைத்துள்ளார். பாரதியார் காவிய வாயிலாக மக்களுக்குரிய கடமையும் உரிமையும் பற்றிய நல்லாறுகள் பலவற்றைப் பாவிகமாக இயற்கை நெறிமூலம் உருவாக்கி, மக்களை இயற்கை அழகில் தோய்ந்து இன்புறுமாறு செய்துவிடுகிறார். இதனால் இக்காவியம் வையத்தே வாழ்வுக்கான இறைமை ஞானத்தை நல்கும் மகத்துவமுடையது: சுத்த அறிவு நிலையில் நன்னெறிகாட்டி பக்தியினாலே முக்தியினை மெய்யன்புணர் வுடன் நாடச்செய்யும் உறுதியினையும் உணர்த்துவது; தமிழ்ப்பண் பையும் பழம் நாகரிகத்தையும் மரபு தவறாது சுவைக்க வைப்பது.

புற இயற்கையின் சாயலை, அகத்தில் நிழலாடுவதைக் கண் டுணர்ந்த பாரதியார், அகக்காட்சியை அறிவுக் காட்சியாகவே கொண்டு இயற்கையியலை வாழ்க்கையொடு தொடர்பு படுத்தி யுள்ளார். இயற்கையின் எழிலையையும், கவர்ச்சியினையும், பாரதியார் எடுத்துக் கிளங்குங்காலை, இறைமையின் அருளாட்சியில் அருப்பி இயங்கும் இறை உணர்வையும் அவர் மக்களது மனதில் ஊட்டி, இதயத்தையும் அதன் இன்ப ஒளியோடு நெகிழவைத்து விடுகிறார், பின்னர் பாரதியார் இயற்கையில் இணைந்து நிற்கும் சக்தியை அவர்களது உள்ளத்தின்கண் உதிக்கும்படியாக, மெய்ஞ் ஞான இன்ப உணர்வினை எழுப்பி, மலரச்செய்து, பக்திநெறியினை உறவாடும் முறையிலும் புலப்படுத்தி விடுகிறார். இத்தகைய புலப்பாட்டின்கண், பாரதப்பண்பாட்டின் பக்திநெறி எவ்வாறு முறுகியுயர்ந்து பாஞ்சாலிபால் ஒழிவற நிறைந்துமேவிய சிறப் பினையும், பெருமையினையும், செந்தமிழில் திளைத்துத் திகழ்ந்த நாவர் போற்றியுள்ளது உணர்ந்து களிக்கத் தக்கது. கவின்பெறு இயற்கையின் இயக்கத்தில், மக்கள் இயற்றும் செய்கைகளும்,

சிந்திக்கும் சிந்தனைகளும், இயற்கையில் இயைந்துள்ள அரிய மூலப்பொருளாகிய இறைகரந்து உறைந்து இயங்குவதால்தான், பொலிவடைகின்றன என பாரதியார் சுட்டுவாராயினர். காப்பியர் பாரதியார், இயற்கையில் காணப்பெறும் தன்மைகளை மெய்ஞ் ஞானக்கண்கொண்டு மக்களுக்கு விளங்கச்செய்து இயற்கையில் இணைந்து நிற்கும் இறைமையின் உண்மையினை மெய்யுணர்வால் ஆய்ந்து கண்டு, மனதற்ற தூய நிலையை அன்னார் அனுபவிக்கு மாறு அறிவுறுத்தி, இறையுணர்வினை ஊட்டும் இயற்கை அழகுகளை தன் காவியத்தில் அள்ளித் தெளித்துள்ளார்.

———— × ————

புலிக் குகை

மாமல்லபுரத்திலிருந்து சுமார் மூன்று கல் தொலைவு வடக்கில் சென்றால் சாளுவன் குப்பம் என்ற ஊருக்கு வரலாம். இது மாமல்லையிலிருந்து கோவளம் வழியாகச் சென்னைக்கு வரும் கடற்கரைச் சாலையில் உள்ளது. இச்சாலையிலிருந்து கடலை நோக்கிச் சென்றால் இரண்டு குகைகள் உள்ளன. ஒன்று புலிக் குகை என்று கூறப்படுவது. இங்கு புலி ஏதும் இல்லை ஆதலின் தைரியமாகவே செல்லலாம். ஆனால், இதன்முன் நின்றவுடன் நம் நினைவையே இழந்து, ஏதோ ஓர் இடத்தில் நிற்பதுபோன்ற பிரமிப்பு ஏற்படும். அல்ல அல்ல மயக்கமே ஏற்படும். பிரும் மாண்டமான யாளிகள் வாயைப் பிளந்துகொண்டு. உறுமிக் கொண்டு, மண்டலமிட்டு நம்மீது பாய வருவது போன்ற அமைப்பு. இதன் மத்தியில் ஒரு மண்டபம். மண்டபத்தின் உள்ளே பணி முடிவடையவில்லை. இது கொற்றவைக்கு ஏற் படுத்தப்பட்ட கோயில். இத்துடன் தென்புறம் உள்ள பாறைப் பகுதியில் இரண்டு யானைகள் முன்னோக்கி வருவது போன்ற சிற்பங்கள் உள்ளன. யானைகள் மேல் அம்பாரி பொருத்தப்பட்டு உள்ளது. அவற்றின் உள்ளே இரு உருவங்கள் செதுக்கப்பட் டுள்ளன. இவ்வுருவங்கள் யாரைக் குறிக்கின்றன என்று தெரிய வில்லை. அதற்கும் தெற்கில் குதிரை ஒன்றின் உருவமும் காணப் படுகிறது. யாளி குகையின் வடபுறம், அமர்ந்த சிங்கம் ஒன்றைச் செதுக்க முனைந்துள்ளனர். இங்குள்ள யாளிகளின் உருவைப் பார்த்துத்தான் இதைப் புலிக்குகை என்றனர்போலும்.

—இரா. நாகசாமி,
மாமல்லை.

ஆயிரத்தில் ஒருவருக்காய்
அமைந்த
அழகிய தான்தோன்றி மாடம்

இரா. கலைக்கோவன், எம். பி. பி. எஃசு; டி ஒ;

மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடிக்குச் செல்லும் வழியில் பதினறு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது ஆக்கூர். அறு பத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான சிறப்புலிநாயனர் வாழ்ந்த இத்திருத்தலத்தில்தான் தான்தோன்றியப்பரின் மாடக் கோயில் அமைந்துள்ளது. கி. பி. ஐந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்து புகழெய்திய கோச்செங்கட் சோழ மன்னனல் கட்டப்பெற்ற எழுபது மாடக் கோயில்களுள் இன்று காணக் கிடப்பன ஒரு சிலவே. அவற்றுள் ஆக்கூர் தான்தோன்றி மாடமும் ஒன்றுகும்.

கோயிலின் கிழக்கு வாயில் மூன்றுநிலைக் கோபுரத்துடன் எடுப் பாக உள்ளது. தெற்குப்புறத்தில் புதிதாக ஒரு வாசல், உயரமான கம்பிக் கதவுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே நடுநாயக மாக மேடையின் மீது அமைந்திருப்பது இறைவனின் மாடக் கோயில், அதன் வலப்புறம் அம்மன் கோயிலும் வடகிழக்கு மூலை யில் அம்பலக் கூத்தரான நடராசருக்கென்று தனிக்கோயிலும் தரை மட்டத்தில் அமைந்துள்ளன. மாடக்கோயிலை யொட்டி வடக்குப் புறத்தில் சண்டிகேசுவரருக்கென்று சிறுகோயில் ஒன்று உள்ளது. மேற்குப் புறத்தில் விநாயகருக் கொன்றும், முருகனுக்கொன்று மாய்த் தனித்தனியே இரு சிறுகோயில்கள் விமானங்களுடன் அமைந்துள்ளன. இவ்விரண்டு உட்கோயில்களுக்கு இடையே தல மரமான கொன்றை மரம் அமைந்துள்ளது.

அம்மன் கோயில் புதிதாக நாயக்கர் காலத்தில் அமைக்கப் பட்டது போலும். இதில் கூண்டு வண்டி அமைப்பில் முன் மண்ட பமும், அதையொட்டி உள்மண்டபமும் உள்ளன. அம்மனின் திருப்பெயர் வாள்நெடுங்கண்ணியம்மை. கருவறை விமானம் விமானத்துக்குரிய அனைத்து உறுப்புகளையும் கொண்டுள்ளது. கரு வறைச் சுவரிலுள்ள தெய்வப்புரைகள் வெறுமையாக உள்ளன.

அம்பலக் கூத்தர் கோயிலின் அடிப்பாக உறுப்புக்களான துணைத்தளம், தாங்குதளம், யாளி வரிமானம் முதலியன கண்ணைக் கவரும் வகையில் அழகுபட செதுக்கப்பட்டுள்ளன இக்கோயிலைச் சுற்றியுள்ள தெய்வப் புரைகளும் வெறுமையாக உள்ளன. இவ்வுட் கோயிலுக்குத் தெற்குப் பார்த்த வாயிலின் வழியே உள் நுழைந்

தால் முன் மண்டபமும், அதையடுத்து இறைவன் திருமுன்னும் உள்ளன. திருமுன் அறையின் வாயிலின் இருபுறமும் உள்ளடங்கிய புரையுள் இடப்புறம் இறைவனின் ஊர்த்தாண்டவ ஓவியமும், வலப்புறம் அம்மன் ஓவியமும் வண்ணத்தில் வரையப்பட்டுள்ளன. அறையினுள் நடராசரும், தேவியும் செப்புத் திருமேனியராய்க் காட்சியளிக்கின்றனர். அம்மன் வடிவம் மிக்க அழகுடன் கருணை பொலிந்த முகத் தோற்றத்துடன் விளங்குகின்றது.

வெளி மதிலின் தெற்குப் புறத்தில், வாயிலையொட்டி உள் பார்த்த நிலையில் தேவாரம் பாடிய மூவர் சிற்பம் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

நடுநாயகமாக விளங்கும் மாடக் கோயிலில் எட்டுப் படிகளுடன் கூடிய கிழக்குப் பார்த்த வாயிலொன்றும், ஐந்துப் படிகளுடன் கூடிய தெற்குப் பார்த்த வாயிலொன்றும் கொண்டு, கருங்கல் திருப்பணியாய் அமைந்துள்ளது, கிழக்குப் பார்த்த படிகளில் பிள்ளையார் வடிவம் ஒன்று பெட்டகக் கோயில் அமைப்பினுள் வைக்கப் பட்டுள்ளது. முன் மண்டபத்தை, அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய தூண்கள் தாங்கியுள்ளன. இம்மண்டபத்தில் சோமாஸ்கந்தர், ஆடிப்பூர அம்மன், செல்லியம்மன், விநயகர் ஆகிய வடிவங்கள் செப்புத்திருமேனிகளாய் உள்ளன, உள் மண்டபத்திற்குள் கருவறை வாயிலின் இருபுறமும் மிக அழகிய வாயிற்காப்போர் சிற்பங்கள் உள்ளன. இவற்றின் அழகும், வேலைப்பாடும் சொல்லுந் தரமன்று. மிக வியத்தகு முறையில் செதுக்கப்பட்டுள்ள இச் சிற்பங்களைக் காண்பதற்கென்றே ஆக்கூர் சென்று வரலாம்!

கருவறையின் வெளிச் சுவரில் தெற்குப் பார்த்த தெய்வப் புரைகளில் அகத்தியர், விநயகர், தென்திசைக் கடவுள் வடிவங்கள் உள்ளன. மேற்குப் பார்த்த தெய்வப் புரையில் இலிங்கோத்பவரும் வடக்குப் பார்த்த தெய்வப் புரைகளில் நான்முகனும், கொற்றவையும் உள்ளனர். நான்முகனுக்கும் கொற்றவைக்கும் இடைப்பட்ட சுவரில் பெரியவர் ஒருவர் இலிங்கத்தை மாலையிட்டு வணங்குவது போன்ற சிற்பம் உள்ளது. இது கோச்செங்கட் சோழனாக இருக்கலாம் என்று கோயில் சிவாச்சாரியார் திரு. வைத்தியநாத குருக்கள் குறிப்பிடுகிறார்.

கருவறையில் தான்தோன்றியப்பர் செங்குத்தாகப் பிளவுபட்ட இலிங்க வடிவில் ஆவுடையார் மேல் விளங்குகிறார். கருவறையை அடுத்த நடை வழியில் போகசத்யாம்பாள் செப்புத் திருமேனியராய்க் காட்சி தருகிறார். கருவறை விமானம் சிற்பச் சிறப்புகளுடன் முழுமையான நிலையில் விளங்குகிறது. கருவறையை ஒட்டியுள்ள

திருச்சுற்றில் நடக்குமிடம் போக மேடைபோல் கட்டி தெய்வ வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆக்கூர் சிறப்புலிநாயனர் வாழ்ந்த ஊராதலால் சிறப்புலிநாயனரின் அருள்வடிவம் சிறுமண்டபத்திற்குள் சிறப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. வடக்குப்புற மூலேயில் ஆயிரத்தொருவருக்கென்று ஒரு சிறு கோயில் உள்ளது. இதன் விமானம் செவ்வக வடிவிலானது. இந்த ஆயிரத்தொருவர் பற்றிச் சுவையான கதையொன்று வழங்குகின்றது.

இந்த ஊரையாண்ட மன்னன் ஒருவன் ஆயிரம் அந்தணர்களுக்கு விருந்தொன்று வைத்தான். யாவரும் உட்கார்ந்தபின் எண்ணிப் பார்த்தபோது ஆயிரம் இலேயில் ஓர் இலே ஆளில்லாமல் இருந்தது, அப்போது புதிதாக ஒருவர் வந்து அந்த இலேக்கு அமர்ந்தார். மன்னனுக்கு அவர் யாரென்று தெரியவில்லே எனவே, அவரைப் பார்த்து, ''நீர் எந்த ஊர்''? என்று கேட்டான். வந்தவர் அதற்கு ''யாருடைய ஊரைக் கேட்கிருய்?'' என்று கேட்டுவிட்டு எழுந்துபோய் ஒரு காட்டினுள் மறைந்துவிட்டார் மன்னவனும், மற்றவரும் அங்கு சென்று பார்த்தபொழுது ஒரு புற்று காணப்படவே, அப்புற்றை மன்னன் வெட்டச் சொல்ல. அங்கிருந்து ஒரு சிவலிங்கம் வெளிப்பட்டது. வெட்டுக் காயம் பட்டு இலிங்கத்தின் மேல் பிளவேற்பட்டு குருதி சிந்தியது. அந்தப் புற்றில் தோன்றியவர்தான் இங்கு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றியப்பர் என்பது அக்கதையாகும்.

'ஆயிரத்தில் ஒருவர்' என்ற பெயரில் அழகான செப்புத் திருமேனியில் உற்சவராய் இங்கு வீற்றிருக்கிருர்.

கடிவிளங்கு கொன்றையந் தாரார் போலும்
கட்டங்கம் ஏந்திய கையார் போலும்'' என்றும்
''மாதூரும் வாள்நெடுங்கண் செவ்வாய் மென்தோள்
மலேமகளே மார்பத் தணேத்தார் போலும்'' என்றும்

அப்பர் அடிகள் ஆக்கூர் தான்தோன்றியப்பரைப் பாடிப் பரவுகிருர்.

''பண்ணொளிசேர் நான்மறையான்
பாடலினெடு ஆடலினன்
கண்ணொளிசேர் நெற்றியினன்
காதலித்த தொல்கோயில்''

என்றும்,

''வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரில் தான்தோன்றி மாடமே''



—: ஆக்கூர் அம்பலக் கூத்தர் திருமுன்னின் அடித்தள அமைப்பு :—

என்றும் சம்பந்தர் பெருமான் இம்மாடக் கோயிலின் பெருமைகளைப் பாடி மகிழ்கிறார்.

''சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்''

என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தர் பெருமானாலும் பாராட்டப் பெறும். சிறப்புலி நாயனார் இவ்வூரில் வாழ்ந்து, தம்மிடம் வரும் அடியார்களுக்கெல்லாம் உணவு படைத்தே இறையடி சேர்ந்து புகழ் எய்தியவராவார்.

இத்தகு புகழ் பெருமைகளைப் பெற்ற இக்கோயில் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்றது.

''இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்து வளச் சோழன்,''

என்று திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழி வரிகளால் இது உறுதிப்படும். கோச்செங்கட் சோழனால் செங்கல் திருப்பணியாய்க் கட்டப்பெற்ற இக்கோயில் பிற்காலத்து சோழமன்னர்களால் கருங்கல் திருப்பணியாய் மாற்றியமைக்கப்பட்டது இக்கோயிலில் இருந்து சோழமன்னர்களான இரண்டாம் இராசாதிராசன், திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராசதேவன், பல்லவ மன்னனான கோப்பெருஞ்சிங்கன், விசயநகர வேந்தனான கிருஷ்ணதேவராயன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் கல்வெட்டுத்துறையினரால் படியெடுக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் மாடக்கோயிலின் முன் மண்டபத்தின் மேற்குச் சுவரின் இடப்புறத்திலும், தாங்கு தளத்தின் கிழக்குப் பகுதியிலும், வெளித்திருச்சுற்றுச் சுவர்களிலும் அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களில் சிவபெருமான், 'தான்தோன்றி மாடமுடையார்' என்று குறிப்பிடப் படுகிறார். இராசேந்திர சிம்மச் சதுர்வேதி மங்கலத்திற்கு உட்பட்டிருந்த வளநாடாக ஆக்கூர் குறிக்கப் பட்டுள்ளது.

இங்குள்ள இரண்டாம் இராசாதிராசனின் பதினைன்காம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டில் '' கடல் சூழ்ந்த '' என்று தொடங்கும் அம்மன்னனின் மெய்க்கீர்த்தி தவிர ஏனைய செய்திகளைச் சொல்லும் வரிகள் அழிந்திருப்பதால் படித்தறியக் கூடவில்லை. திரிபுவனச் சக்கரவர்த்தி இராசராச தேவனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று ஆக்கூர் தான்தோன்றி மாடமுடையார்கோயிலில் சில நந்தா விளக்குகள் எரிப்பதற்காக அவ்வூரைச் சேர்ந்த தனியார் சிலர் நிலக்கொடை தந்த செய்தியைக் கூறுகிறது.

இம்மன்னனின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒரு சுவையான செய்தியைக் கூறுகிறது. இத்திருக்கோயிலில்

வைகாசித்திங்களில் நடந்துவந்த திருவிழாவின்போது இறைவனின் செப்புத்திருமேனியை தீர்த்தமாட காவிரிக்கு கொண்டு செல்ல பெருவழியொன்று அமைக்கும் பொருட்டு, கொண்டு செல்லக் கூடிய வழியில் உள்ள நிலங்களை, அந்நிலங்களின் உரிமையாளர் கள் கோவிலுக்குக் கொடையாகக் கொடுத்தனர். இந்நிலங்கள் இறையிலி நிலங்களாக கூட்டப் பெருமக்களால் கணக்குப் புத்தகங் களில் பதிவு செய்யப்பட்டன. இக்கல்வெட்டின் மூலம் ஊரவைப் பெருமக்கள், கூட்டப்பெருமக்கள் என்று அழைக்கப்பட்ட செய்தியை அறிய முடிகிறது.

கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டொன்று, வரிக்கொடுமை தாங்காமல் இவ்வூரைவிட்டு ஓடிய குடிமக்களை, வரவழைக்கும் பொருட்டு இம்மன்னர் பத்தாயிரம் வராகன் பொன் பெறுமதி யுடைய வரிகளைத்தள்ளுபடி செய்ததைச் சொல்கிறது.

இதே மன்னனின் ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டொன்று தில்லை மூவாயிரன் என்பான் தான்தோன்றியப்பர் அருளால் தன் உடல்நோய் தீர்ந்தமைக்கு நன்றி பாராட்டும் விதத்தில் திருத்தான் தோன்றி மாடமுடையார் கோயிலில் வழிபாடுகள் நிகழ்த்தவும், காணிக்கைகள், செலுத்தவும் வாய்ப்பாக நிலக்கொடை அளித்த செய்தியைக் கூறுகிறது.

சகலபுவன சக்கரவர்த்தி கோப்பெருஞ் சிங்கதேவனின் கல்வெட் டொன்று பாண்டியர்களையும், ஒய்சளர்களையும் வென்று காவிரியின் தென்கரைத் தலங்களை வழிபடவந்த, அழகிய பல்லவர் என்னும் வீரப்பிரதாபர் ஆக்கூருக்குச் செய்த நன்மைகளைக் கூறுகிறது.

இம்மாடக்கோவிலில் உள்ள கல்வெட்டுக்களில் காலத்தால் பழமையானது இரண்டாம் இராசாதிராசனின் கல்வெட்டேயாகும் முதல் குலோத்துங்கன் காலத்திலும் விக்கிரம சோழன் காலத்திலும் பலகோவில்களுக்குத் திருப்பணி செய்யப்பட்டதாக கல்வெட்டுக் களால் அறிகிறோம். ஆக்கூருக்கு அருகிலுள்ள திருக்கடையூரில் கிடைத்த கல்வெட்டுக்களின் மூலம் அங்கு முதல் குலோத்துங்கன் காலமுதல் இரண்டாம் இராசாதிராசன் காலம்வரை பலநிலைகளில் கோயில் பணி நடந்து முடிந்ததை உணரமுடிகின்றது. ஆக்கூர் தான்தோன்றி மாடத்தின் திருப்பணியும் இதுபோல் பல நிலைகளில் நடந்திருக்கலாம். கோச்செங்கட் சோழனால் செங்கல் திருப்பணி யாக கட்டப்பட்ட ஆக்கூர் தான்தோன்றி மாடம் காலப்போக்கில் அழிவுற்றுப் பலகாலம் கவனிப்பாரற்று கிடந்து, இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டதாகக் கொள்வதே பொருத்தமானதாகும்.

பழமையும், பெருமையும் மிகுந்த இக்கோயில் இன்று வருவாயின்றி, இருந்து வருவது துன்பமானது. இக்கோயிலில் பூசை செய்துவரும் வைத்தியநாத குருக்கள் அருமையான மனிதர். வறுமையின் பிடியில் சிக்கியும், இறைவனுக்கு மனமாரத் தொண்டு செய்துவரும், இவர் போன்ற இறையன்பர்களையும், இது போன்ற சிறப்புமிக்க தலங்களையும் வளமுறச் செய்து போற்ற வேண்டியது தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரின் கடமையாகும்.

—X—

வினா விடை

வினா:

தொல்காப்பியப்பாயிரத்தில் வரும் தென்குமரி எனும் தொகைச் சொல் குறித்து உரையாசிரியர்கள் மலை, ஆறு என்னும் இரு வேறுபொருள் கூறுகின்றனர். தொல்காப்பியத்திற்குப் புத்தம் புதிய விளக்கங்கள் நல்கி வரும் தாங்கள் கொள்ளும் பொருள் மலையா, ஆறா கடலா? தக்க விடை வேண்டும்.

—கா. அரசன்,
தஞ்சை.

விடை:

சூத்திரயாப்பில் பனம்பாரனர் தொல்காப்பியனரை விஞ்சுகின்ருர். ''வடவேங்கடம் தென்குமரி'' என்ற அளவில் நிறுத்தி விட்டார் உரையாளர்தம் வன்மையால் வேங்கடத்தை மலையென்று ஐயமின்றிக் கொண்டுள்ளோம். பனம்பாரனர் கருத்தும் அதுவாக இருக்கலாம். எனினும் அத்தொகைச்சொல் ஆகுபெயரா னன்றி மலை என்னும் பொருள் உணர்த்தாது. வேங்கடம் என்பதற்கு வெம்மைமிக்ககாடு என்பதுதான் செம்பொருள். காடு இயல்பாகவே தீப்பற்றி எரிந்து வறந்து நிற்குமாதலின் காடு—என்பதற்குப் பாலை என்ற பொருளும் உண்டாயிற்று.

வேங்கடத்தை மலை எனக் கொண்டமையின் தெற்கின் கண்ணுகக்கூறிய குமரியும் மலையாக இருத்தல் வேண்டுமென்று கொண்டனர் இதற்குச் சான்ருக நிற்பது ''குமரிக்கோடுங் கொடுங் கடல்கொள்ள'' என்னும் சிலம்பின் தொடராகும். கோட்டிற்கும் காட்டிற்கும் கொம்பொன்றே வேறுபாடு. எது பாடம் என்பதை உறுதிசெய்வது எப்படி ? உரையாசிரியர்களால் கோடு என்பது நிலைபெற்றுள்ளது.

பெருமலைகளிடத்து ஆறுகள் தோன்றி வருவது இயற்கை. குமரியாறு என்ற கருத்தும் உரையாளர்தம் கருத்தேயாம் குமரி என்னும் சொல் கொம்மை என்னும் அடிச்சொல்லின்றும் ஆகிய பெயர்—''கொம்'' என்பது குமி—குமிழ். கூம்பு கொம்பு கும்மி குமை முதலியவற்றை உண்டாக்கும்—இச்சொற்கள் யாவும்—திமிர்தல் வளர்தல் ஓங்குதல் குவிதல் ஆகிய பொருட்குறிப்பை யுடையனவாம்.

எனவே குமரி என்பது வளர்ந்து நிற்கும் மேட்டுப் பகுதியைக் குறிக்குஞ்சொல் என்பது புலனாகின்றது. அது காடா மலையா? இவற்றுள் ஒன்றாகத்தான் இருத்தல் வேண்டும்.

கடலாக இரா தென்பது தெரிகின்றது என்னை, முப்புறமும் கடலாக இருக்க ஒன்றை மட்டும் எடுத்துக்கூறுவது முறையாத லில்லை. தமிழகம் நாற்பேரெல்லைகளை உடையதெனத் தொல்காப்பியரும் கூறுகின்றார். (செய்யுளியல்-79)

எனவே வேங்கடத்திற்கு எவ்வாறு பொருள் கொள்ளுகின்றோமோ – குமரிக்கும் அவ்வாறே கொள்ளவேண்டும் என்பது என் கருத்து. — ச. பாலசுந்தரம்.

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடை மட்டுமின்றி
திரைகடலோடியும்
திரவியம் தேடெனும்
பழமொழிக் கிணங்க
பாரெங்கும் பரவிவிரவி வாழும்
தமிழர்தம் இல்லங்களில்
பொங்கல் பொங்கும்
இன்பத் திருநாளாம்
பொங்கல் திருநாளின்
நல் வாழ்த்தினை
தமிழ்ப்பொழி லன்பர்களுக்கு
உள்ளம் பொங்க
உவகை பொங்க அன்புடன்
தெரிவித்துக் கொள்கிறோம்.

—பதிப்பாசிரியர் குழு

பதிப்பாசிரியர் குழு:

1. திரு. **எஸ். நடராசன்,** எம். எல். ஏ.,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்,**
பேரா. தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்,** எம். ஏ.
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்,**
367, மேல அரச வீதி, தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்,**
கரந்தை, தஞ்சாவூர்-2.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்,** எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர், உ. மே. பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்-2.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன் பி. ஏ.,**
அமைச்சர், க. த. சங்கம், பொழிற்றொண்டர்.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு	வெளிநாடு
1.	ஆண்டு வரி	... 20—00	... 030—00
2.	தனி இதழ்	... 02—00	
3.	ஆயுள் வரி	... 250—00	... 250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	... 000—25
ஆண்டு வரி	... 003—00
ஆயுள் வரி	... 100—00

Regd No. TN/TJ/17.

உ

தமிழ் வாழ்க!

தமிழ்ப் பொழி…

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

எண்: [illegible]

திரு. ஆசிரியர். அவர்களுக்கு

சரஸ்வதி மகால் நூல் நிலையம்,

அரண்மனை -

தஞ்சாவூர் 61300

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்–613 002.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுருதி வீணை	0—25
கவியரசு நினைவுமலர்	1—00
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் — (பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின் — கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர் — ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00
பிற வெளியீடுகள்:	
கலைக்கூத்தன் கவிதைகள்	6—00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா,
… 1724 … தஞ்சாவூர்-613 002